விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி 19 · புதன்கிழமை (05.10.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 290

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# 6,575 க்கும் அதிகமான கொலைகளை செய்த விமல் வீரவன்ஸவை கைது செய்ய வேண்டும்!

## குமார் ரூபசிங்க நீதிமன்றில் மனு

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலரும் பாராளுமன்ற குழுத்தலைவருமான விமல் வீரவன்ஸவை கைதுசெய்ய பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட வேண்டுமெனக்கோரி மேல்முறையீட்டு நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற அமைப்பின் ஏற்பாட்டாளரான குமார் ரூபசிங்க இம் மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார். கடந்த ஏப்பிரல் மாதம் 6ஆம் திகதி மகரகமவில் இடம்பெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூட்டத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ஸ, தம்மை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரைக் காட்டிலும் பயங்கரமானவர் என்றும் இனத்துரோகி என்றும் விமர்சித்திருந்ததாக மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விமர்சனமானது தமது உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடியதென குறிப்பிட்டுள்ள குமார் ரூபசிங்க அச்சமூட்டும் இவ்வறிவிப்புக் குறித்து தாம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த போதிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வன்முறைகள் இடம்பெற்ற வேளையில் ஜே.வி.பியினர் 6ஆயிரத்து 575 க்கு அதிகமான கொலைகளைச் செய்துள்ளனர். அவர்கள் இதுவரை தம்மிடம் இருந்த ஆயுதங்களை அரசாங்கத்திடம் கையளிக்கவில்லை.

இந்நிலையில் விமல் வீரவன்ஸவின் அச்சமூட்டும் கருத்தான[illegible] உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்த[illegible]. எனவே அவரை கைதுசெய்து உட[illegible]ாக நீதிமன்றில் ஆஜர் செய்யவேண்[illegible]ன்ற உத்தரவினை பொலிஸ்மா அதிபருக்கு விடுக்கவேண்டுமென குமார் ரூபசிங்க தமது மனுவில் கேட்டுள்ளார்.

இதேவேளை மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர் ,ஜே.வி.பியின் செயலர் ரில்வின் சில்வா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை குறிப்பிட்டுள்ளார். (ந-4)

# மகேஸ்வரனை விலக்க முடிவு -ஐ.தே.க.

# பதவி விலகத்தயார் - மகேஸ்வரன்



(கொழும்பு)

**கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக செயற்பட்டமைக்காக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

இது பற்றி கருத்துத் தெரிவித்த ஐ.தே.கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா ,3குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக பகிரங்கமாக கருத்து தெரிவித்தமை ஒன்று என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பணம் பெற்றுக்கொண்டதாக மகேஸ்வரன் குற்றம் சாட்டியிருந்தார்.

9இலட்சம் வாக்குகளைக் கொண்டது இ.தொ.காங்கிரஸ்.இத்தேர்தலில் இவ் வாக்குகள் அத்தியாவசியமானவையாகும். இந்நிலையில் மகேஸ்வரன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள இ.தொ.காங்கிரஸ், ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாகச் சாடியுள்ளது.

இதேவேளை தமக்கான ஆதரவைப் பெறுவதற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## எச்சரிக்கைச் சுவரொட்டி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்தலில் ஈடுபடவேண்டாமென 'வளம் பேணும் சங்கம்' எனும் பெயரில் இப் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இவ் எச்சரிக்கையினை மீறி மணல் அகழ்வில் ஈடுபட்டால் பொதுமக்களால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-43)

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இன்று சுகவீன லீவுப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

26 கோரிக்கைகளை முன் வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அடையாளத் தொழிற் சங்க நடவடிக்கையாக சர்வதேச ஆசிரியர் தினமான இன்று ஒரு நாள்சுகவீனலீவுப்போராட்டத்தில்ஈடுபடவுள்ளது.

தமிழ்ப் பாடசாலைகள்,தமிழ் ஆசிரியர்கள், தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய 26 கோரிக்கைகளை முன்வைத்தே இப் போராட்டம் இடம்பெறுகிறது.

இக்கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்று உரிய பதிலளிக்கப்படாது விடத்து ஒக்டோபர் 24 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் சங்கம் அறிவித்துள்ளது. (ந-19)

# தலைவர் பிரபாவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்காம்

## திவயின நாளிதழ் தகவல்

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு எதிராக சர்வதேச நீதி மன்றத்தில் அமெரிக்காவில் இயங்கும் இராணுவ உதவி அமைப்பு வழக்குத் தொடரவுள்ளதாக சிங்கள நாளிதழான திவயின தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்தக் குற்றங்கள் மனிதர்களுக்கு எதிரான ஏனைய குற்றச் செயல்கள் மற்றும் யுத்த நிறுத்த மீறல்களுக்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உள்ளதாக அமெரிக்காவில் உள்ள இலங்கை இராணுவ உதவி அமைப்பின் நிறைவேற்று அதிகாரி சேனக பெரேரா தெரிவித்துள்ளார்.

600 பொலிஸ் அதிகாரிகள் படுகொலை, ஐக்கியநாடுகள் சபையின் சட்ட விதிகளை மீறி சிறுவர்களை படையில் சேர்த்தல், தற்கொலைக் குண்டுதாரிகளை உருவாக்கல் உட்பட 13 (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


# கூட்டமைப்பு அரசாங்கம் மக்களை ஏமாற்றிவருகிறது

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகள் உக் கிரமடைந்துள்ளதாக எதிர்க்கட் சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

18 மாதகாலம் கூட்டமைப்பாக செயற்பட்ட அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக் கத தவறியுள்ளதாகவும் இந் நிலை யில் மீண்டும் ஜனாதிபதி தேர்த லில் கூட்டமைப்பை உருவாக்கி மக்களை ஏமாற்ற முயல்வதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 18 மாதகாலமாக கூட்ட மைப்பாக செயற்பட்ட போதும் பொருட் களின் விலைகளைக் குறைக்க முடியாத இவர்கள் இனிமேல் எவ் வாறு விலைகளைக் குறைப்பார்கள என்றும கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக கடந்த தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்புக்கள் வழங் கிய வாக்குறுதிகளான 350 ரூபா விற்கு உரம் வழங்குதல், 15 ரூபா 50 சதத்திற்கு நெல்லைக் கொள் வனவு செய்தல் என்பன நடை முறைப்படுத்தப்படவில்லை என வும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# ஆதரவற்ற சிறார்களை வழிநடத்த அனைவருமே முன்வரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவதற்கு அனைத்துத்தரப் பினரும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும் சிறுவர் உரிமை கள் எழுத்தில் இருந்து விட்டால் போதுமானது என நினைப்பது தவ றானதாகும். இந்த உரிமைகளை எமது சிறுவர்கள் அனுபவிக்கச் செய்யவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச செயலகத்தின் திட்டப்பணிப்பாளர் கே.கேதீஸ்வரன் சிறுவர் மேம் பாட்டு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுவர் கொடி வார ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித் தார்.

சிறுவர் மேம்பாட்டு நிலையத் தின் தலைவரும் யாழ்.மாநகர சபையின் ஆணையாளருமான சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிர தம விருந்தினருக்கான முதலா வது கொடியை தலைவர் அணி வித்தார்.

பிரதம விருந்தினர் கே. கேதீஸ் வரன் அங்கு தொடர்ந்து உரை யாற்றும் போது எமது சமுதாயத் தின் நாளைய நற்பிரஜைகளாகிய இன்றைய சிறுவர்களை அனைத்து வழிகளிலும் நாம் வழிநடத்துவது டன் ஊக்கப்படுத்த வேண்டும்.

இன்றும் எம்மத்தியில் பல சிறு வர்கள் சரியான வழிகாட்டல்கள் இன்றி வாழ்ந்து வருகின்றார்கள் இத்தகைய சிறுவர்களை இனம் கண்டு அவர்களை வழிநடத்த வேண்டியது மிகவும் முக்கியமான தாகும்.

இந்தவகையில் சிறுவர் மேம் பாட்டு நிலையம் மாவட்டத்தில ஆதரவற்ற பிள்ளைகளை இனங் கண்டு அவர்களின் கல்வி அபி விருத்திக்கு நிதியுதவி அளித்து வரு வது குறித்து நான் மகிழ்ச்சி யடைகின்றேன் எனக்குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் கல்வி அபிவி ருத்தி இணைப்பாளர் வீ .ஸ்ரீசக்தி வேல் மனிதநேய அமைப்புக்க ளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ் பரமநாதன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினர். (த-16)

# இருளில் மூழ்கியுள்ள வீதிகள்

காரைநகர் வாரிவளவு வீதி விளக்குகள் அனைத்தும் பழு தடைந்துள்ளதனால் வாரிவளவு கிராம வீதிகள் கடந்த ஒருவார காலமாக இருளில் மூழ்கியுள்ளன.

மின் விளக்குகள் ஒளிராமை குறித்து இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்களிடம் முறை யிடப்பட்டுள்ளதாகவும் ஆனாலும் இன்றுவரை குறித்த மின்குமிழ் களைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்கள் கவலை தெரிவித் துள்ளனர். (த-246)

# பொலிஸ்பிடியில் சிக்கிய ஏமாற்றுப் பேர்வழி

(கொழும்பு)

வீடுகளுக்கு குடிநீர் வழங்கு வதாகக்கூறி நிதி மோசடி செய்து வந்த நபர் ஒருவரை கிருலப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டநபர் கடந்த மூன்று வருட காலமாக நுகே கொட, கல்கிசை பகுதிமக்களிடம் குடிநீர் பெற்றுத் தருவதாகக் கூறி இலட்சக் கணக்கான பணத்தைப் பெற்றுள் ளதாக கிருலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித் துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப நபருக்கு எதி ராக கிருலப்பனை பொலிஸ் நிலை யத்தில் மாத்திரம் 37 முறைப்பாடு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (து-8)

# தீவகக் கல்வி வலயத்தின் செயற்பாடுகள் முடக்கம்

(காரைநகர்)

திவக கல்வி வலயத்தில் கல் விப்பணிப்பாளர், நிர்வாக உத்தி யோகத்தர்கள் இன்மையால் தீவக கல வி வலய செயற்பாடுகள் அனைத்தும் முடங்கிப்போயுள்ள தாக தீவகக் கல்வி வலய ஆசிரி யர்கள் கவலை தெரிவித்துள்ள னர்.

தீவக வலயத்தில் கடமையாற றிய கல்விப்பணிப்பாளர், மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் இட மாற்றம் பெற்றுச்சென்ற போதும் அப்பதவிகளிற்கு இன்னமும் உரிய அதிகாரிகள் நியமனம் செய் யப்படவில்லை.

இதனால் பல நடைமுறைச் செயற்பாடுகள் முடங்கிப் போயுள் ளது. தொழில்அடையாள அட்டை மற்றும் சம்பள விபரம் என்பன பெற்றுக்கொள்வதற்கு கால தாம தங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் குறித்த வலய ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-246)

# காரை.பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி மக்கள் கிராமிய கருத்திட்டத்தினூடாக ஐந்து அபி விருத்தி வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் காரை மேற்கில் விவசாய வாய்க்கால் புனரமைப்பும், காரை மத்தி கிராம சேவையாளர் பிரிவில் பொதுக் கிணறு ஒன்றும், காரை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பொது மலசலகூடம் ஒன்றும், காரை தென் கிழக்கு கிராமசேவையாளர் பிரி வில் பொதுக் கிணறும், காரை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இடைப்பிட்டி மில் வீதியும் புனர மைக்கப்படவுள்ளது.

இவ் அபிவிருத்தி வேலைத் திட் டங்களிற்கு இலங்கை சமுர்த்தி அதிகார சபையினூடாக ஒதுக்கப் பட்ட ஒரு இலட்சம் ரூபா நிதி காரை நகர் பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட் டுள்ளது. (த-246)

# இராசிபலன்

**05.10.2005**
**(புரட்டாதி 19, புதன்கிழமை)**
**துதியை பிற்பகல் 05.15 மணி வரை**
**சித்திரை காலை 07.27 மணி வரை**
**இராகுகாலம் 12.02-01.32 மணி வரை**
**சுபநேரம் 04.32-06.02 மணி வரை**
**றம்ழான் நோன்பு ஆரம்பம்.**

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, நண்பர்கள் உதவி,முயற்சி கைகூடும், போசன சுகம். |
| இடபம் | சத்துருஜெயம்,தொழில் விருத்தி, எடுத்தகாரியம் கைகூடும், உறவின் சந்திப்பு. |
| மிதுனம் | வியாபார நன்மை , புத்திரரால் கவலை , ரோக நிலை , முயற்சி தாமதம். |
| கடகம் | மனச்சஞ்சலம் , சுப செலவு, மாதா சுகம், காரிய தாமதம். |
| சிங்கம் | காரிய நன்மை, கீர்த்தி, தன வருவாய், சகோதரர் உதவி. |
| கன்னி | தனவிரயம், எடுத்தகாரியம் தாமதமாகும், உற வினர் வெறுப்பு, போசன சுகக்குறைவு. |
| துலாம் | சிந்தனை மிகுதி, புதிய முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, பண விரயம், சயன சுகக்குறைவு. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை, செல்வாக்கு, குடும்பசுகம். |
| மகரம் | அதிகாரம், நல்ல செய்தி, தொழில் நன்மை, முயற்சி கைகூடும். |
| கும்பம் | புதிய முயற்சி, பிரயாணம், பிதா சிந்தை, அதிக செலவு. |
| மீனம் | அபகீர்த்தி, தன விரயம், முயற்சி தடங்கல், போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# 12 ஈழ அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டின் ஈரோடு மதுரை மாவட்டம் பாவனிசாகர் ஆணையூர் அகதி முகாம்களில் வசித்துவந்த 12 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் காலை தலைமன் னார் ஊடாகத் தாயகம் திரும்பினர். இவர்களில் 5ஆண் களும் 7 பெண்களும் அடங்குவர் தலைமன்னார் பொலி ஸாரினால் நேற்று அவர்கள்நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்டனர்

மன்னார் நீதிபதியின் உத்தரவுப்படி அவர்களின் சொந்த இடமான வவுனியா, குருமன்காடு, திருகோண மலை, சம்பந்தர் வீதி, செட்டிக்குளம் நேவியகுளம் தலை மனார் தியல் ஆகிய இடங்களுக்கு மன்னார் நகர கிராம உத்தியோகத்தர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர். (ச-4)

# சூடுபட்ட இரு ஊர்காவல்படையினரும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

பொலநறுவை வெலிக்கந்தை நாமல்கம இராணுவ முகாமுடன் இணைந்து பணியாற்றும் ஊர்காவற் படை வீரர் மீது மற்றொரு வீரர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தானும் துப்பாக்கியால் சுட்டு கொண்டுள்ளார்.

இந்த இரண்டு ஊர்காவற்படை வீரர்களுக்கும் இடையில் நீண்ட காலம் நிலவி வந்த குரோதமே இதற குக் காரணமென தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் காலை பணிக்கு வந்த சோமதாச எனும் ஊர்காவற்படைவீரர் இரவுப் பணி முடிந்து வீடு திரும்பவிருந்த பெரேரா என்ற ஊர்காவல் படைவீரர் மீது துப்பாக்கிச் சூடு செய்துள்ளார்.

சோமதாச மீது 8முறை துப்பாக்கிச் சூட்டை நடத்திய பின்னர் பெரேரா தன்னைத் தானே சுட்டுக்கொண்டுள் ளார். இருவரும் ஆபத்தான நிலையில பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற-4)

# வெள்ளியன்று நீதிமன்றில் ஆஜராக அனுருத்த ரத்வத்தைக்கு உத்தரவு

ஊழல் வழக்கில் ஆஜராகுமாறு முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு கொழும்பு நீதிமன்றம் மீண்டும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் தன் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக்கூறி தன் மீதான இவ் வழக் கில் ரத்வத்தை ஆஜராகவில்லை .உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வேறு ஒரு திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராவதாக ரத்வத்தை முன்னர் கோரியிருந்தார்.

இந்நிலையில் ரத்வத்தை மீதான 4.5 கோடி ரூபா ஊழல் வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் திங் கட்கிழமை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

ரத்வத்தை சார்பில் ஆஜரான சட்டத்தரணி, சுட்டுக் கொல்லப்பட்ட அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பட்டியலில் ரத்வத்தையும் இருப்பதால் அவர் நீதிமன்றத்தில் ஆஜ ராக இயலவில்லை என்று தெரிவித்தார். இதைக் கேட்ட நீதிபதி உபாலி அபயரட்ண, எதிர்வரும் வெள் ளிக்கிழமை அனுருத்த ரத்வத்தை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டார். (ற-4)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுக்கு சந்திரிகாவின் பங்களிப்பே காரணம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் தமது அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடு களில் தமிழீழ விடுதலைப்புலிக ளுக்கு பயணத்தடை விதித்துள்ள தற்கு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் முக்கிய பங்களிப்பே காரணமென அறிவிக்கப்பட்டுள் ளது.

ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக ஆராய்ந்தே இந்த முடிவை எடுத்தி ருப்பதாகவும் முன்னாள் வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர் கொலை செய்யப்பட்ட பின் னர் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஐக்கிய நாடுகள் சபையில் எடுத்துக்கூறிய கருத்துக்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவிற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந் தது என்றும் அமைச்சரவைப் பேச் சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தி னால் வாதிக்கப்பட்ட பிரயாணத தடை இனப் பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு குந்தகமாக அமை யாது என இலங்கைக்கான நோர் வேத் தூதுவராலயத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர் வே அங்கத்துவ நாடு அல்ல என தெரிவித்த பேச்சாளர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிரான பிரயாணத்தடைக்கும் தமது நாட் டிற்கும் தொடர்பு இல்லை என்றும் தெரிவித்தார். (த-9)


# அன்பு மாணவர்களே!

**நவராத்திரி பூசையையொட்டி**

## ‘நவராத்திரிப் மாலை’

பகுதியை வலம்புரி வெளியிடுகிறது. மாணவர் களாகிய உங்களின் கவிதையும் இதில் இடம்பெற வேண்டு மாயின், நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாட சாலை, கற்கும் தரம், பெயர் ஆகிய விபரங்களுடன்

“வலம்புரி”
இல. 03, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ.ர்)

# இம்ரான் - பாண்டியன் படையணியின் 13ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

(கிளிநொச்சி)

லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் 13ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் 'தேசத்தின் புயலகள்' பாகம் 4 ஒலிநாடா அறிமுக விழாவும கடந்த ஞாயிற்றுககிழமை இடம்பெற்றது.

விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுபபினர் க.வே.பாலகுமாரன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை படையகத் தொடக்க பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் கேணல் ஆதவனும் படையணிக் கொடியினை இம்ரான் பாண்டியன் படையணி சிறபபுத் தளபதி வேலவனும் ஏற்றிவைத்தனர்.



தமிழீழ தேசியத் தலைவரால் கரும்புலி தினத்தன்று வெளியிட்டு வைக்கப்பட்ட 'தேசத்தின் புயலகள்' பாகம் 5 ஒலிநாடா அறிமுக வெளியீட்டினை தளபதி வேலவன் அங்கு வெளியிட்டு வைக்க, திரைப்பட வெளியட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ராதா பெற்றுக் கொண்டார். இந்த ஒலிநாடா உருவாக்கத்தில் பங்கேற்ற கலைஞர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

கேணல் ஆதவன், சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல்



தொடர்ந்து லெப்.கேணல் இம்ரானின் சகோதரர் சுரேஸ், ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். அதைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

வரவேற்புரையினை இம்ரான் -பாண்டியன் படையணி பொறுப்பாளாகளில் ஒருவரான தனியரசும், தலைமையுரையினை இம்ரான் பாண்டியன் படையணியின் பொறுப்பாளாகளில் ஒருவரான அப்பனும் நிகழ்த்தினர்.

ஒலிநாடா வெளியீட்டுரையினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையினை க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.



தீபன், கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணி சிறப்புத் தளபதி மணிவண்ணன் ஆகியோர் கலைஞர்களைச் சிறப்பித்தனர். (ர-4)

# வேட்பாளர்களுடன் விரைவில் தேர்தல் ஆணையாளர் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களிடம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க விரைவில் ஆலோசனை நடத்தவுள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நடைபெறவுள்ள இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைதியான நேர்மையான தேர்தலை நடத்துவதற்கு உதவுமாறு வேட்பாளர்களிடம் தயானந்த திசாநாயக்க வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதனையடுத்து எதிர்வரும் வாரத்தில் இச்சந்திப்பு நடைபெறும் என்ற தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ர-4)

# இதுவரை 8 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய இலங்கை பொதுஜனக் கட்சி சார்பில் விக்டர் ஹெட்டிகொட நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்தினார்.

இதனடிப்படையில் இதுவரை 8 பேர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தமது கட்டுப்பணத்தினை செலுத்தியுள்ளனர்.

சோசலிஷ சமத்துவக்கட்சி, முறபோக்கு முன்னணி, ஐக்கிய தேசிய மாற்று முன்னணி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா தேசிய முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி மற்றும் இலங்கை முற்போக்கு முன்னணி என்பனவே ஏற்கனவே தமது கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தன.

இதேவேளை, நாளை நண்பகல் 12 மணியுடன் ஜனாதிபதி வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும் பணிகள் நிறைவடையவுள்ளன.

ஜனாதிபதி வேட்பாளர்களின் வேட்புமனுத்தாக்கல் 7ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ர-4)

# மேலும் 10,000 பட்டதாரிகளுக்கு அடுத்த ஆண்டு வேலைவாய்ப்பு

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போது அமுல்செய்யப்படும் வேலைவாய்ப்புத் திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்போவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

இரக்குவானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதாரத்துறைக்கு தாதிமாரைச் சேர்த்துக்கொள்ளும் திட்டத்தின் கீழ் ஐயாயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அங்கு அவர் மேலும் தெரிவித்தார். (ர-4)

# எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் புலிகள் மீதான தடைகளை நீக்கும்

## ஐ.தே.கவின் கருத்துக்குப் பல அமைப்புக்கள் கண்டனம்

தாம் ஆட்சிக்கு வந்தால் புலிகள் மீதான ஐரோபபிய மன்றத்தின் தடையை நீக்குவோம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ள கருத்துக்களைப் பல பொது அமைப்புக்கள கண்டித்துள்ளன.

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டமை உள்ளிட்ட பல அரசியல் படுகொலைகளை விடுதலைப் புலிகள் இயக்கம்தான் மேற்கொண்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு தகவல்கள் உறுதிசெய்யப்படவில்லை என்று முக்கிய பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது கண்டிக்கத்தக்கது என மக்கள் கலைஞர்கள் அமைப்பு, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், சோமதேரர் மன்றம், தேசிய பிக்கு முன்னணி, ஸ்ரீலங்கா சுதரந்திர பிக்கு ஸ்தாபனம், ஸ்ரீலங்கா சுதந்திரச் சட்டத்தரணிகள் சங்கம், மாணவர் அமைப்பு, பல்கலைக்கழக பேராசிரியர் சங்கம் போன்றவை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்ந்து அரசியல் பிரமுகர்களை படுகொலை செய்து, சிறுவர் சிறுமியரை கடத்திச் செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அவ்வாறான செயல்களைத் தடுக்கும நோககில் விடுதலைப்புலிகள் மீது அழுத்தத்தைக கொடுப்பதற்காகவே ஐரோப்பிய ஒன்றியம் பயணத் தடைகளை விதித்தது. தாம் ஆட்சிப்பீடம் ஏறினால் புலிகள் மீதான தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முககிய பிரமுகர்கள் கூறியிருப்பது வருந்தத்தக்கது என்று அவ் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (த-7)

# விரிவுரைகள் இவ்வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப்பீடங்களில் தற்போது தற்காலிகமாக மூடப்பட்டுள்ள 2ஆம், 3ஆம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளை இந்த வாரத்திற்குள் ஆரம்பிக்க முடியுமெனறு உபவேந்தர் பேராசிரியர் திலக் ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

இந்தப் பீடத்தின் முதலாம் இறுதியாண்டு மாணவர்களின் விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளாா.

ஒரு மாதத்திற்கு முன்னர் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிபபீடம், கலைப்பீடம் என்பனவற்றின் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலையடுத்து குறிப்பிட்ட பீடங்கள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல சம்பவம் தொடர்பான அறிக்கை தமக்கு கிடைத்துள்ளதாகவும் பேராசிரியர் தெரிவித்தார்.

அறிக்கையின் அடிப்படையில் மோதல் சம்பவம் தொடர்பான முறையான விசாரணைகளை நடத்துமாறு அந்தந்த பீடங்களின் பீடாதிபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகளின் போது குற்றவாளிகளாக இனம்காணப்படும் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனைகள் குறித்து தீர்மானிக்கும் பொறுப்பு பீடாதிபதிகள் சபைக்கு வழங்கப்படுமென்றும் உபவேந்தர் தெரிவித்தார். (த-9)

## தற்காலிகமாகக் கடமையாற்றும்

# வைத்தியசாலை ஊழியர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தற்காலிக அடிப்படையில் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது சேவையை நிரந்தரமாக்கக் கோரியே இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்தப்பட்டது.

சுகாதார அமைச்சின் அலுவலகம் முன்பாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தற்காலிக அடிப்படையில் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டு தம்மை நிரந்தரமாக்கவேண்டுமெனக் கோரினர்.

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் 2500க்கும் மேற்பட்டவர்கள் தற்காலிக அடிப்படையில் சேவையாற்றி வருவதாக அகில இலங்கை சுய சேவை சங்கத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் காமினி குமாரசிங்க தெரிவித்தார்.

180 நாட்களின் முன்னா அவர்களின் சேவை நிரந்தரமாக்கப்படவேண்டியுள்ள போதிலும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

அரச நிர்வாக அமைச்சு ஒருங்கிணைக்கப்பட்ட சேவையாளர்களையும் தற்காலிக சேவையாளர்களையும் நிரந்தரமாக்குவதற்கான சுற்றறிக்கையை விடுத்துள்ளபோதிலும் சுகாதார அமைச்சு இதுவரை அதனை நிறைவேற்றவில்லை. இதுவரை 96 பேர் மாத்திரமே சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ர-8)

# விவசாயிகள் கவலை

(காரைநகர்)

பருவகால மழை பொய்த்தபடியினால் காரைநகர் பெரும்போக விவசாயிகள் பலரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

மழை பெய்ய வேண்டிய காலம் வந்தும் இன்றுவரை மழை பெய்யாததினால் பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்த வேலைகள் எதனையும் விவசாயிகள் மேற்கொள்ளமுடியாது ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதனால் விவசாயிகள், தெழிலாளர்களுக்கு பாரிய நட்டம் ஏற்படும் அபாயம் ஏற்படடுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (த-246)

# தீவக பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபை, உள்ளூராட்சி வாரத்தையொட்டி அண்மையில் புனித மரியாள் வித்தியாலய மண்டபத்தில் நடாத்திய தீவக பாடசாலைகளுக்கிடையிலான மாணவர்களின் பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு,

மேற் பிரிவு

1ஆம் இடம்:- அ.மேரி கொன்ஸ் செப்ரா, யா.புனித மரியாள் வித்தியாலயம்.

2ஆம் இடம:- கி.சுரேஸ், யா.யாழ்ரன் கல்லூரி.

3ஆம் இடம்:-பு.சயந்தன் யா.கரம்பன் சண்முகநாதன் வித்தியாலயம்.

மத்திய பிரிவு

1ஆம் இடம்:- ம.மேரிடிசானி, யா.புனித மரியாள் வித்தியாலயம்.

2ஆம் இடம்:- வி.பாலேந்திரன், யா.யாழ்ரன் கல்லூரி.

3ஆம் இடம்:-ம.மறின் தர்மிகா, யா.புனித மரியாள் வித்தியாலயம்.

கீழ்பிரிவு

1ஆம் இடம்:- ந.சயந்தா, யா.சண்முகநாதன வித்தியாலயம், கரம்பன் ஊர்காவற்றுறை.

2ஆம் இடம்:- ச.ராகவன், யா.யாழ்ரன் கல் லூரி.

3ஆம் இடம்:- த.வித்தியாகரன், யா.யாழ்ரன் கல்லூரி. (த)

# பன்னிரு வேங்கைகளின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(திருநெல்வேலி)

குமரப்பா புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 18ஆம் ஆண்டு நிறைவு நினைவுதின நிகழ்வுகள் இன்று வடமராட்சி திருவிலில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஈகைச் சுடர், தேசியக் கொடி, பொதுச்சுடர் என்பவற்றை மாவீரா களின் பெற்றோர் ஏற்றவுள்ளனர்.

தொடர்ந்து அகவணக்கம், மலர் அஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

சிறப்புரைகளை முன்பள்ளிப் பணிப்பாளா துரை சத்திய சீலன், வைத்திய கலாநிதி மைலேறும் பெருமாள் பொது அமைப்புக்களின் சார்பில் செபஸ்தியன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை, தமிழீழ கடற்புலிகளின் துணைப்படைப் பயிற்சி பெற்ற 200 பேர் கொண்ட அணியினர் குமரப்பா புலேந்திரன உள்ளிட்ட 12 பேரின் நினைவு நாளை ஒட்டி இன்று தமிழீழத் தேசியக் கொடியேற்றி அணிவகுப்பு மரியாதை ஒன்றையும் பகுதியினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (

# 2ஆம் லெப். மாலதியின் 18ஆவது ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

2ஆம் லெப். மாலதியின் 18ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது.

இதற்கான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் கோப்பாயில் இடம்பெறறது. இங்கு நினைவு நாள் ஏற்பாட்டுக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளான அக்டோபர் பத்தாம் திகதி பிற்பகல் 4 மணியளவில் மாலதியின் நினைவுத் தூபியிலும், மாலை 6 மணியளவில் சிவன் கோவில் முன்பாகவும் நினைவு நிகழ்வு நடைபெறுமென ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

2ஆம் லெப் மாலதியின் நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளுமான அகடோபர் பததை அனைத்து தமிழ பேசும் மக்களும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (த)

# பல்கலைக்கழக அனுமதிக்கு 15 ஆயிரத்து 68 பேர் தகுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து 15 ஆயிரத்து 68 பேர் இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதம் நடைபெற்ற கல்விப பொது தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2005, 2006 ஆம் கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கோரி இவர்கள் விண்ணப்பிகக முடியும்.

பல்கலைக்கழக அனுமதி கோரி இம்மாதம 14ஆம் திகதி வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த வடக்கு - கிழக்கு, தென்மாகாண பாடசாலை மாணவர்கள் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்துமாறு அதிபர்களுக்கு பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2006ஆம் ஆண்டில் ஒரு பல்கலைக்கழகம் ஊவா மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதுடன், 16ற்கும் மேற்பட்ட புதிய பாடநெறிகள் பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-7)

# ஸ்ரீ.மு.கா, இ.தொ.கா.வின் ஆதரவின்றி மஹிந்த தேர்தலில் வெல்வாராம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பவற்றின் ஆதரவு இல்லாமலே மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவார் என்று விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சிறிபதி சூரியராட்சி தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலின்போது அந்தக் கட்சிகளின் ஒத்துழைப்பின்றி தமது கட்சி வெற்றி பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்டி மாவட்ட குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதற்தடவையாக ரவூப் ஹகீம், தொண்டமான் ஆகியோரின் ஆதரவு இன்றி 2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும், மாகாணசபைத் தேர்தலிலும் எமது கட்சி வெற்றி பெற்றது.

குறிப்பாக மாகாண சபைத் தேர்தலில முதற்தடவையாக இந்த இரு தரப்பினரின ஆதரவு இல்லாமல் கட்சி வெற்றி பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# பிரிவினைவாதத்தை தோற்கடிக்க அரசியல் கட்சிகள் இணையவேண்டும்

(கொழும்பு)

பிரிவினைவாதத்தினை தோற்கடிப்பதற்கு நாட்டிலுள்ள சகல முக்கிய அரசியல் காட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

தான் ஆட்சிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை துரிதமாக ஆரம்பிக்க தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழு உறுப்பினர்கள் மூலம் ரணில் விக்கிரம சிங்கவிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் நாடா?, ஐககியமா? என விவாதிப்பது பொருத்தமல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு அனைவரும் செயற்படும்போது நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே யதார்த்தம் என்றும் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (த-9)

# நவராத்திரிப் பாமாலை



## இன்று இரண்டாம் நாள்

### வீரத்தை அளித்து வீறுபெறச் செய்வாய்!

முப்பெருந் தேவிகளுக்கும் மும்மூன்று தினங்கள் - அதில்
முதல் மூன்று தினங்களும் உந்தனுக்கே தாயே!
பார் எல்லாம் உன்புகழின் பண்ணொலியைக் கேட்கின்றோம்
பாரினில் மக்கள் துயர் துடைத்திட நீ வாராயா?

மகிடனை அழித்து மனுக்குலத்தை மகிழ்வித்தாய்
மானிடரின் துயர் தீர்க்க அருட்கருணை பாலித்தாய்
வீரத்தை அளித்தெம்மை வீறுபெறச் செய்வதற்கு
விரைவினிலே நின் அருளை அடியார்க்கு நல்கிடம்மா!

அ.மதிகிருபா
ஏழாலை ம.வி.

### அருள் பொழியும் அம்பிகை

சக்தி என்ற சொல்லிலே தரணி இன்று வாழுது
மனப் பயத்தை நீக்கியே மாந்தர்களைத் தேற்றுது
மனுக்குலத்தின் கண்ணீரை மணிப் பொழுதில் நீக்குது
மாணவர் நம் அனைவரையும் மாண்புடனே காக்குது
(சக்தி என்ற...)

சுற்றுகின்ற பூமியிலே சூழ்ந்து இனம் வாழுது
சூழ்ச்சி செய்யும் மாந்தரின் ஆட்சிதனை அழிக்குது
பாட்டினோடு தான் பணியும் பக்தர்களைக் காக்குது
பாரினிலே மனிதர் வாழ அருள் மழையைப் பொழியுது
(சக்தி என்ற...)

சு.தமிழினி,
யா/கந்தர்மடம் சை.பி.வி.

### சீர் செய்திடுவாய்

சிங்கத்திலே ஏறி எம்மை சிறப்புடனே காத்திடுவாய்
சீர்கெட்டுப் போகும் ஞாலமதை சீர் தன்னை செய்திடுவாய்.

யோ.மதீசன்
அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.

# புலிகள் மீதான ஐரோ. ஒன்றியத்தின் பயணத்தடை நோர்வேயின் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது

## நோர்வேத் தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத்தடை, சமாதான முயற்சிகளில் தமது அனுசரணைப் பணியில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று நோர்வே தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தினால் பயணத்தடை தொடர்பாக இலங்கையிலுள்ள நோர்வே தூதரகப பேச்சாளர் ஜேர்ஸ் டி தொம்ஸ்டார் கருத்துக் கூறியபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது விடயம் தொடர்பில் மேலும தெரிவிக்கையில்,

25 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியத்தில், நோர்வே ஒரு உறுப்பு நாடு அலல. இதனால் ஐரோபபிய ஒன்றியத்தின் இந்தப் பயணத்தடை நோர்வேயை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது.

நோர்வேயின் புதிய அரசாங்கம் புதிய சமாதானக்குழு அங்கத்தவர்களை தெரிவு செய்ததும் சமாதான அனுசரணைப் பணிகள் எந்தவித மாற்றமும் இன்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக விடுதலைப்புலிகளுடனும், அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ட்றொன் பியூரு ஹெவடே திட்டமிட்டபடி இம்மாத நடுப்பகுதியில இலங்கை வரவுள்ளார் என்றார்.

இதேவேளை, பி.பி.சியின் ஏசியா டுடே நிகழ்சசியில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர், சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று உறுதிப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ற-4)

# 6 மாதகால தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி வாழ்க்கை தொழிற் பயிற்சிககு உதவும் அமைசசு கட்டடத் தொழில மற்றும் நீர்க்குழாய் பொருத்துதல் போன்ற தொழில்சார் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இளைஞர்களுக்கு 6 மாத கால தொழிற் பயிறசியினை வழங்கும் நோக்குடன் பிரதேச செயலாளர்கள் ஊடாக பயிலுனர்களை உள்வாங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படு மென அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளா நாகராசா அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சிநெறிகளுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 3 ஆயிரத்து 500 படி 6 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தகுதியானவர்கள் அவ்வப பிரதேச செயலாளர் ஊடாகவோ அல்லது மாவட்டச் செயலகத்தில் இயங்கும் இணைப்புச செயலகத்தின் ஊடாகவோ விணணப்பிகக முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# கட்சியின் செயலகமாக மாறும் அலரி மாளிகை

## ஐ.தே.க கடும் அதிருப்தி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகை கட்சி செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பிரதமரின் செயலரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

அண்மைக்காலமாக அலரி மாளிகையில் நடாத்தப்பட்ட இரவு விருந்துபசாரங்களின் போது பொதுமக்களின் பணம் தனிப்பட்ட கட்சி நலன்களுக்கு செலவிடப்பட்டமை தொடர்பில் பிரதமரின் செயலர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூற வேண்டியவராக இருப்பதாகவும் ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது. (ற-4)

# எதிர்பார்ப்புடன் இன்று ஆரம்பமாகும் சுப்ப சீரிஸ் கிரிக்கெட் தொடர்

உலக லெவன் அணிக்கும் -அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான சுப்ப சீரிஸ் கிரிகெட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இப்போட்டியில் வெற்றிபெறும் நோக்குடன் இரு அணிகளும் கடுமையான பயிற்சியில ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எப்படியாவது இந்த முக்கியமான போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்ற நிலையிலேயே இவ் இரு அணிகளும் உள்ளன.

ஆஷஸ் தோல்விக்குப் பின்பு மீண்டும் ஒரு மாபெரும் சவாலை அவுஸ்திரேலியா சந்திக்க உள்ளது. இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த சுழற்பந்து வீச்சாளர்



பிரட் ஹாக், வேகப்பந்து வீச்சாளர் ஷான் டைட ஆகிய இருவரும் காயம காரணமாக விலகினார்கள். இதனால் இவர்களுக்குப் பதிலாக கேமரூன் ஒயிட், ஸ்டுவர்ட் கிளாாக் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



உலக லெவன் அணி ராகுல் ராவிட், சேவாக், அக்தர், அப்ரிட்டி, முரளீதரன், பீற்ர்சன், பிளின ரொப் எனப் பல நட்சத்திர வீரர்களுடன் முழுட் பலத்துடன் களமிறங்குகிறது. இந்நிலையில் சொந்த மண்ணில் போட்டி நடப்பது அவுஸ்திரேலியாவிற்கு சாதகமாக இருந்தாலும் முன்னணி வீரர்களின் மோசமான நிலை, வலுவிழநத துடுப்பாட்ட வரிசை போன்றவை ஏமாற்றம் அளிபபதாக உள்ளன. பந்துவீச்சில் மெக்ராத் மட்டுமே நம்பக்கூடியவராக உள்ளார். இதனால உலக சமபியனான அவுஸ்திரேலியாவிற்கு இம்முறை வெற்றி வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

இப்போட்டி தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகள் அணிவீரர் லாரா கருத்துத் தெரிவிக்கையில், அவுஸ்திரேலிய அணி பலவீனமாக இருப்பது உண்மைதான். ஆஷஸ் தோல்வி அவர்களை மிகவும் காயப்படுத்தியுள்ளது. இதனால் திடமான நிலையில் உள்ள நமது உலக லெவன் அணி மிகுந்த நெருக்கடியுடன் இருக்கும் என நம்பிக்கையுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியின் துவக்க ஆட்டக்காரரான மத்யூ ஹைடன் ஒரு நாள் தொடருக்கான அணியில் இடம்பெறவில்லை. இதனால் இவருக்குப் பதிலாக சைமன் கடிச், கில்கிறிஸ் உடன் இணைந்த ஆட்டத்தை ஆரம்பிப்பார்கள் என கப்டன் ரிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார். உலக லெவன் அணியல் சேவாக், குமார் சங்ககார ஆரமபத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்குவார்கள். (து-19)



பிரான்ஸ் நைஸ் நகரில் நடைபெற்ற பிரெஞ் லீக் கால்பந்துப் போட்டியில் மார்செலே அணி வீரர் ஹூயிஸ் கார்சியா (இடது) நைஸ் அணியின் மமடோ பகயோகாவிடம் இருந்து பந்தை தட்டிச் செல்லப் பாய்கிறார்.

## லியண்டர் பயஸ் தரவரிசையில் முன்னேற்றம்



இந்திய ரெண்ணிஸ் வீரா லியண்டர் பயஸ் உலக தரவரிசையில் இரட்டையர் பிரிவில் 16ஆவது இடத்தில் இருந்து 14ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். சமீத்தல் அவர் தாய்லாநதில் நடந்த ரெண்ணிஸ போட்டியில் 34 ஆவதுடபுர்ஸ டைட்டிலை வென்றதன் மூலம் அவருடைய தரவரிசை இப்படி முன்னேற்றம் கண்டிருக்கிறது.


இன்னொரு இந்திய வீரரான மகேஷ்பூபதி ஏற்கனவே வகித்த 12ஆவது இடத்தை அப்படியே தக்க வைத்துக்கொண்டுள்ளார்.

மகேஷ் பூபதி 2305 புள்ளிகளுடனும், லியண்டர் பயஸ் 2225 புள்ளிகளுடனும் உளளனர்.

ஒற்றையர் தரவரிசையில் மற்றொரு இந்திய வீரர் ஹர்ஸ் மன்காட் 234 ஆவது இடத்தையும், பிரகாஷ் அமிர்தராஜ் 278ஆவது இடத்தையும், ரோஹன் போபன்னா 304 ஆவது இடத்தையும் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

**விளையாட்டு செய்திகள்**

## தர வரிசையில் முன்னேறினார் கிம் கிளைஸ்டர்ஸ்





லக்சம்பர்க்கில் நடைபெற்று வந்த போர்டிஸ் சம்பியன்ஷிப் ரெண்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் 6-2, 6-4 செட் கணக்கில் ஜெர்மனி வீராங்கனை அன்னலீனாவை வென்று சம்பியன் ஆனார்.

இந்த வெற்றியின் மூலம் உலக தரவரிசையில் முதலாம் இடத்துக்கு கிளைஸ்டர்ஸ் முன்னேறியுள்ளார். இதுவரை அவர் மூன்றாவது இடத்தில் இருந்தார்.

ஏற்கனவே முதல் இடத்தில் இருந்த மரியா சரபோவா, 2ஆவது இடத்தில் இருந்த டேவன் போர்டு ஆகியோர் காயம் காரணமாக சில போட்டிகளில் விளையாடாததால் பின்னுக்குத் தளளபபடடனா. (ந-19)

## உதைபந்தாட்டப் போட்டிக்கு ஜேர்மன் பயிற்றுனர்

எதிர்வரும் 26.10.2005 தொடக்கம் 29.10.2005 வரையான நாட்களில் யாழ்.விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சிப் பட்டறை ஒன்று ஜேர்மனியிலிருந்து வருகை தந்துள்ள பயிற்றுனரால் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பயிற்சியில் கலந்து பயனைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு பாடசாலையிலிருந்து ஒரு இளம் பயிற்றுனரையும், ஐந்து சிறந்த வீரர்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பங்குபற்றுபவர்களின் பெயர், பிறந்த திகதி, சொநத முகவரி ஆகிய விபரங்களை 08.10.2005 ககு முன்னர் நேரிலோ அல்லது கடித மூலமோ செயலாளர் யாழ்.உதைபந் தாட்ட லீக் இல.20, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்படுபவர்களின் விபரமும் பயிறசி பற்றிய விபரமும் பின்னர் அறிவிக்கப்படும். (து-19,110)



இந்திராகாந்தி தங்க கோப்பை மகளிர் ஹொக்கிப் போட்டியில் நேற்றுமுன் தினம் நியூஸிலாந்து ~ இத்தாலி அணி வீராங்கனைகள் மோதிய ஆட்டத்தின் பரபரப்பான காட்சி.

## இலங்கை துடுப்பாட்ட சபை செயலாளர் இலண்டனில் மரணம்

இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் ட்ரைபோன் மிரண்டோ (வயது- 53) இலண்டனில் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

இலண்டனில் படித்துக்கொண்டிருக்கும் தன் மகள்களை சந்திப்பதற்காக மனைவியுடன் இலண்டன் சென்றபோது மாரடைப்பு ஏற்பட்டு மிரண்டோ காலமானார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தமிழ் யூனியனின் நிர்வாகியாக பல ஆண்டுகாலம் பணியாற்றியவர் ட்ரைபோன் மிரண்டோ.

துடுப்பாட்டச் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுவில் ட்ரைபோன் மிரண்டோவையும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க நியமித்திருந்தார். (து-4)

## 'பட்மின்ரன்' போட்டி முடிவுகள்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக்கழகம் 'டில்கோ ஹொலிடே லிமிடெட்' அனுசரணையுடன் ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களிடையே நடாத்திய 'பட்மின்ரன' போட்டியில் வெற்றியீட்டியவர்கள விபரம் வருமாறு,

**ஆண்கள் ஒற்றையர் பிரிவு**

1ஆம் இடம்- ஆசிரியர்- ஜே.மோகன்
2ஆம் இடம்- ஆசிரியர்- ரி.ஆர்.கிங்சிலி

**பெண்கள் ஒற்றையர் பிரிவு**

1ஆம் இடம்- ஆசிரியை- எஸ்.விஜயரட்ணம்
2ஆம் இடம்- ஆசிரியை- பி.தனபாலன்

**ஆண்கள் இரட்டையர் பிரிவு**

1ஆம் இடம்- ஆசிரியர்- ரி.ஆர்.கிங்சிலி
ஆசிரியர்- ஆர்.கேதீஸ்வரன்
2ஆம் இடம்- ஆசிரியர்- எம்.விக்னகுருபரன்
ஆசிரியர்- எஸ்.நந்தகுமார்

**கலப்பு இரட்டையர் பிரிவு**

1ஆம் இடம்- ஆசிரியர்- ஜே.மோகன்
ஆசிரியை- எஸ்.விஜயரட்ணம்
2ஆம் இடம்- ஆசிரியர்- எம்.விக்னகுருபரன்
ஆசிரியை- பி.தனபாலன். (து-19)

## மேசைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 'டில்கோ ஹொலிடே லிமிடெட்' அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் ஆசிரியர்களிடையே நடாத்திய மேசைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வருமாறு,

**ஆண்கள் ஒற்றையர் பிரிவு**

1ஆம் இடம்- ஆசிரியர்- ரி.ஆர்.கிங்சிலி
2ஆம் இடம்-ஆசிரியர்- எம்.ஜே.பெனில்டஸ்

**பெண்கள் ஒற்றையர் பிரிவு**

1ஆம் இடம்- உத்தியோகத்தர்- பி.திலகவதி
2ஆம் இடம்- உத்தியோகத்தர்- எஸ.சிவாஜினி

**ஆண்கள் இரட்டையர் பிரிவு**

1ஆம் இடம்- ஆசிரியர்- எம்.டி.தம்பிராஜா
ஆசிரியர்- ரி.ஆர்.கிங்சிலி
2ஆம் இடம்- ஆசிரியர்- எம்.விக்னகுருபரன்.
ஆசிரியர்- எம்.ஜே.பெனில்டஸ
(து-19)

## இளைஞர் எழுச்சி நாள் போட்டி முடிவுகள்

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு பருத்தித்துறை மறைக் கோட்ட இளைஞர் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் எழுச்சி நாள் போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மன்றங்களின் விபரம் வருமாறு,

கரப்பந்தாட்டத்தில் முதலாவது இடத்தை கட்டைக்காடு இளைஞர் மன்றமும், தாச்சிப் போட்டியில் முதலாவது இடத்தை சாவகச்சேரி லிகோரியார் இளைஞர் மன்றமும், நாடகப் போட்டியிலும் முதலாவது இடத்தை சாவகசசேரி லிகோரியார் இளைஞர் மன்றமும், குழுப் பாடல் போட்டியில் முதலாவது இடத்தை உடுப்பிட்டி இளைஞர் மன்றமும் தட்டிக்கொண்டன.

இதில் சாவகச்சேரி லிகோரியார் இளைஞர் மன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட "சூனிய தேசம்" என்ற இளைஞர் சமூக விழிப்புணர்வு நாடகம் பலரது பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவற்றிற்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஞாயிறு (9.10.05) தும்பளை லூர்த்து அன்னை ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்மாவட்ட குழு முதல்வர் அருட்திரு. ஜே.நீக்லஸ் அடிகளாரும் யாழ்.மறை மாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு.சகாயநாயகம் அடிகளாரும் கலந்து பிக்கவுள்ளனா். (து-1

# சாவினைச் சரித்திரமாக்கிய பன்னிரு வேங்கைகள்!

"தனிமனிதன் ஒருவன் தன் சமுதாயத்திற்காக சாகத்துணிவானாயின் அந்த சமுதாயம் வாழும்" என்பது அண்ணல் காந்தி கூறிய கூற்றாகும். நாம் மில்லர், திலீபன், மாலதி, அன்னைபூபதி, கிட்டு, பொன்னம்மான் போன்ற 18000 போர் வீரர்களை எமது விடுதலைப் போராட்டத்தில் இழந்துள்ளோம்:

நாம் இம்மண்ணில் உயிரோடும், உயர்ந்த தன்மாத்தோடும் வாழ்கிறோம் என்றால் இவற்றுக்கெல்லாம் வித்திட்ட பெருமை மடிந்த எம் மாவீரர்களையே சாரும். இந்த அடிப்படையில் தான் மறைந்த மாவீரர் எவரையும் நாம் புதைப்பதாகக் கூறுவதில்லை. மாறாக விடுதலைக்காக அவர்களை விதைக்கிறோம எனக் கூறுகிறோம்.

**படைத்தளபதி குமரப்பா, புலோந்தினின் தற்கொடைத்தியாகம்**

எம் விடுதலைப் போராட்ட வரலாற்றைப பொறுத்த வரையில் 1987 ஒக்டோபர் திங்கள் ஓர் இருள் சூழ்ந்த காலகட்டததையே உருவாக்கியது. மாநிலத்தை வாழ்விக்க வந்த அண்ணல் காந்தி பிறந்தது ஒக்டோபர் 2ஆகும. அதே நாளில் பருத்தித்துறையைச் சார்ந்த கடலில் நடந்த ஓர் சிறு நிகழ்ச்சி. ஸ்ரீலங்காக அரசின் விட்டுக் கொடுக்க மறுத்த வெறியாட்டமும் ஜெ.ஆரின் ஆட்சியுடன் முறையாக இராஜதந்திர தொடர்புகளை வைத்திருக்க முடியாத ரஜீப் காந்தியின் பலவீனமும் இவ் விருள் சூழ்ந்த நிலையை உருவாக்கியது.

**இந்திய அரசின் சதியினாலும் இலங்கை அரசின் வெறியாட்டத்தினாலும் பலியான படைத்தளபதிகள் குமரப்பா, புலோந்திரன் உட்பட 12 வேங்கைகளின் நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இலங்கைக் கடற்படை, 17 உயாமட்ட விடுதலைப்புலித் தலைவர்களைக் கைப்பற்றியது. இவர்களில் குமரப்பா, புலேந்திரன் போன்றோர் எம் நினைவை விட்டகலா பெருந் தலைவர்கள். இந்தியாவிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவு திலீபனின் மறைவை அடுத்து பெரும் நெருக்கடிக்கு ஆளாகி ஈடாட்டமாய் இருநதது. அந்த ஈடாட்டமான உறவு வெடிக்கின்ற அளவுக்கு குமரப்பா, புலேந்திரன் மற்றும் 12 போராளிகள் சயனைட் அருந்தி தற்கொலை செய்த நிகழ்ச்சி இந்நாட்டிலும், நானிலத்திலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

**டிக்சிட் - பாலசிங்கம் மோதல்**

இந்தியத் தூதுவராக விளங்கிய டிக்சிட ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் பேசி இச்சிக்கலைத் தர்க்க முயன்றது உண்மை. டெலகியில தனது விடுமுறையை கழிக்கச் சென்ற டிக்சிட் ஓடோடி வந்து விடுதலைப்புலிப் போராளிகளை விடுவிக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

இச் செய்தியை டிக்சிட் கூறியபோது அனைத்து விடுதலைப்புலிகளும் ஆயுதங்களை அர்ப்பணித்த நிலையில் பொது மன்னிப்பினை குடியரசுத் தலைவர் வழங்கிய நிலையில் இவர்களை விசாரனைக்கு அழைத்துச செல்ல முயல்வது இலங்கை - இந்திய ஒப்பநத்தை மற்றும் செயல் எனக் கூறிய அன்ரன் பாலசிங்கம் இந்நிலையில் விடுதலைப் போராளியின் உயிருக்கு ஆபத்து ஏற்படின் நாம் விரும்பாத விளைவுகள் ஏற்படும் என்று டிக்சிட்டிடம் கூறியபோது, தன் இயலாத் தனமையைக காட்டும் முற்றயில் டிக்சிட் கைவிரித்தார்.

**தலைவர் பிரபாகரன் பாலசிங்கத்திற்கு அணிவித்த நச்சுக்குப்பி**

இந்திய தூதுவர் டிக்சிட்டும் படைத்தளபதி சிங்கும் தம இயலாத்தன்மையை எடுதது்க் கூறியதையடுத்து பாலசிங்கம் இம் மோசமான நிலையை விளக்குவதற்கு குமரப்பா, புலோந்திரன் ஆகியோரைச் சந்திக்கச்சென்று அவர்களிடம் விளக்கிய போது இப்படைத் தளபதிகள் விசாரனைக்குட்பட்டு தண்டனையைப் பெறுவதைவிட தற்கொலை செய்வது தான் தமக்கு ஏற்றது எனக்கூறி தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கும்படி அன்ரன் பாலசிங்கத்திடம் கொடுத்தனர்.

இக்கடிதத்தைப் படித்தவுடன் பிரபாகரனின் கண்கள் செந்நிறமாகி கலங்கின. இந நிலையில் தம் காவலரை அழைத்து நச்சுக் குப்பியைத் தாங்கிய நாடாவைப் பாலசிங்கத்தின் கழுத்திலும், மாத்தையாவின் கழுத்திலும அணிவித்து உடனடியாக அவர்களிடம் ஒப்படைக்கும்படி கூறினார். தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் தன் வாழ்நாளில மிக்க துயர்தோய்நத நிகழ்ச்சி இதுவாகும் என்று பாலசிங்கம் தன் நூலில் எழுதியுள்ள குறிப்பை நாம் படிக்கின்றபோது எம்மை மீறி எம் கண்கள் கலங்குகின்றன.

ஜெ.ஆர்.ஜயவர்த்தனாவை தன் கடும் பிடியிலிருந்து விடுவிக்க டிக்சிட் பெரும் முயற்சி எடுத்தபோதும் ஜெ.ஆரை மிஞ்சிய அளவிற்கு சிங்கள வெறியாட்டத்தில் ஈடுபட்ட அத்துலத்முதலி இவ் விடுதலைப் போராளிகளை விரைந்து கொழும்புக்கு அனுப்ப முயற்சியெடுத்த போது எல்லா விடுதலைப்புலகளும் நச்சுக் குப்பியை விழுங்கினர். இதில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 விடுதலைப்போரளிகள் உயிர் துறந்தனர்.

**குமரப்பா - புலோந்திரன் தற்கொலை நாட்டில் தீயாகப் பரவியது**

குமரப்பா, புலேந்திரன் ஆகிய படைத் தளபதிகளுடன் ஏனைய போராளிகளும் தற்கொலை செய்தனர் என்ற செய்தி நாடெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. இத் தற்கொலை நிகழ்ச்சி இந்தியப் படையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது என்கின்ற செய்தி தமிழ் மக்களை கொதித்தெழச் செய்தது. இதன் விளைவு இந்தியப படை வீரர்கள் ஏளனத்திற்கு ஆளாக்கப்பட்டு தாக்கப்பட்டனர். அத்துடன் கிழக்கு மாகாணத்தில சிங்களப் பொதுமக்களும் தாக்கப்பட்டு இனக்கலவரம் ஏற்பட்டவேளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை நீக்கியதோடு நாட்டில் அமைதியை நிலைநாட்ட இந்தியப்படை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜெ.ஆர் கட்டளையிட்டார்.

அதன் விளைவு 1987 ஒக்டோபர் 7ஆம் திகதி இந்தியப்படைத்தளபதி சுந்தர்ஜியும் பாதுகாப்பு அமைச்சர் கே.சி.பண்டும் கொழும்புக்குப் பறந்து வந்தனர். விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையும்படி டெல்கி முடிவெடுத்துள்ளது என்று இவர்கள் கூறியது ஜெ.ஆர்.ஜயவர்த்தனாவிற்கு எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. இந்தியாவையும விடுதலைப்புலிகளையும் மோதவைப்பது தான் அவர் சதித்திட்டம். அவர் திட்டம் நிறைவடைந்ததையிட்டு அவர் மகிழ்ச்சியடைந்தார்.

டெல்கி இந்த முடிவை எடுத்போதும் இந்திய அமைதிப்படைத் தளபதிகளாகி டிப்பின்டர் சிங்கும் யாழ்ப்பாணத்தில் பொறுப்பாயிருந்த படைத்தளபதி ஹர்கிரட்சிங்கும் விடுதலைப்புலிகளுடன் மோதுவதை ஏற்கவிரும்பவில்லை. டிப்பின்டர்சிங் தமிழ் நாட்டின் தலைமை அமைச்சராகிய எம்.ஜி.ஆருடன் தொடர்பு கொண்டு அவலநிலையைப் போக்க முயன்றும் எம்.ஜி.ஆர் கடும் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்ததனால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

படைத்தளபதி பண்டுருட்டி ராமச்சந்திரனுடன் தொடர்பு கொணடபோதும் எதுவும் செய்ய முடியவில்லை. ரஜீவ்காந்தி புலிகளுக்குத் தான் ஒரு பாடம்படிப்பிக்கப் போவதாக வெறிப்போக்குடன் செயற்பட்டார். ஒகடோபர் 9ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையவேண்டுமென்று ரஜீவ்காந்தியின் பொறுப்பற்ற போககிற்கு படைத்தளபதி சுந்தர்ஜியும் துணைபோனார்.

1987 ஒக்டோபர் 10ஆம் திகதி அதிகாலையில் விடுதலைப்புலிகளின் ஊடக அலுவலகங்கள் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் தாக்குதலிற்கு ஆளாகின. விடுதலைப்புலிகள் சார்பான ஈழமுரசு, முரசொலி அலுவலகங்கள் குண்டுவச்சிற்குள்ளாகிச் செய்தியாளர் சிறைப்பிடிக்கபபட்டனர். விடுதலைப்புலிகளின் நிதர்சனம் என்கின்ற தொலைக்காட்சி நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. இப்போர் 2 ஆண்டுகளும 7 மாதங்களும் நடைபெற்றன.

இந்திய வரலாற்றில அது எதிர்கொண்ட நீண்டகாலப் போர் இதுவாகும். இப்போரில 1500 இந்தியப் படை வீரர்கள் மடிந்தனர். உயிரிழந்தோரின் தொகையின் 4 மடங்கு அளவில் இந்தியப்படை வீரர் படுகாயமுற்றனர்.

ஒரு இந்திய ஊடகவியலாளனின் கருத்துப்படி 1962இல் சீனாவை எதிர்கொண்ட போது இந்தியாவிற்கு ஏற்பட்ட ராஜதந்திர தோல்வியை மிஞ்சுகின்ற அளவிற்கு இத் தோல்வி அமைந்தது.

**மா.க.ஈழவேந்தன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**தமிழ்தேசியக் கூட்டமைப்பு**

இதன் விளைவு 1990 மார்ச்சில் இந்தியப் படை வெற்றிகரமாகப் பின்வாங்கியது. இலங்கையின் இராணுவப் பகுப்பாய்வாளன் கூற்றின்படி, வியட்நாம் போரில் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட தோல்வியை விட இந்தியாவிற்கு ஏற்பட்ட இத் தோல்வி பெரிதாகும.

சுருங்கக் கூறின் தமிழீழ விடுதலைப் புலிகளின் படைத்தளபதிகள் குமரப்பாவும் புலேந்திரனும் மற்றைய மாவீரர்களும் செய்த மாபெரும் தியாகம் அவர்கள் செய்த தற்கொடை இந்தியாவிற்கும் ஈழத்தமிழருக்குமிடையே ஒருகாலத்திலிருந்த நல்லுறவை முற்றாகத் துண்டித்தது. இனிமேல் எந்நிலையில் இந்திய துணைக்கண்டத்தினை நாம் நம்ப முடியாது என்ற எண்ணத்தை விடுதலைப்புலிகள் மனதிலும ஈழத்தமிழர் மனதிலும் உருவாக்கியது.

எம் நெஞ்சில் நிறைந்த தளபதி குமரப்பாவும், புலோந்திரனும் அவர்களுடன் சேர்நத 13 மாவீரர்களும் செய்த தியாகம் வீண் போகவே முடியாது. தமிழீழம் தோன்றுவதை எவரும் தடுக்க முடியாது. தோன்றுகின்ற தமிழீழத்தின் வரலாற்றை வரைவோர் தளபதிகள் குமரப்பாவினதும், புலேந்திரனினதும் அவர்களோடு மடிந்த மற்ற வீரர்களினதும் பெயர்களைப் பொன் எழுத்துக்ககாளல் பொறிப்பா என்பது உறுதி. □

## குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

(வடமராட்சி கிழக்கு)

உவர் நீரை நன்னீராக்கும் இயந்திரம் ஒன்று மருதங்கேணி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள இடைத்தங்கல் முகாமகளில் வாழும் மக்களுக்கான குடிநீர்ப்பிரச்சினையினை தீர்ப்பதற்காக இந்த இயந்திரத்தினை யாழ் மாவட்ட தேசிய நீர் வடிகாலமைப்புச் சபை வழங்கியுள்ளது.

எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் ஒரு மணித்தியாலயத்திற்கு பன்னிரண்டு ஆயிரம் லீற்றர் சுத்திகரித்த நீரை வழங்கும். இதனால் வடமாரட்சிக் கிழக்கு மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம் என்று உறுதியாகக் கூறினார் இந்தப் பிரதேச சபைப் பொறுப்பதிகாரி. (த-23)

## உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன

(வடமராட்சி கிழக்கு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை இழந்து இடைத்தங்கல் முகாங்களில் வாழும மக்களுக்கு மருதங்கேணி பிரதேச சபை ஆற்றிய சேவைகளைப் பாராட்டி ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் ஒரு தொகுதி உதவிப்பொருடகள் வழங்கப்பட்டுள்ளன.

முற்பது ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த உதவிப்பொருள்கள் இப் பிரதேச சபை பொறுப்பதிகாரி பொ.தங்கராசாவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (த-23)

## ஆசிரியர் பற்றாக்குறை

(உடுவில்)

உடுவில் கோட்டத்தில் இயங்கி வரும் ஏழாலை மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருகின்றது இதனால் அங்கு உயர்தரத்தில் படிக்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். (த-33)

## வீதி சேதம் மக்கள் சிரமம்

(ஏழாலை)

ஏழாலை கிழக்கில் அமைந்திருக்கும் ஏழு கோயிலுக்குச் செல்லும் வீதியில் திருத்த வேலைகளுக்காகக் கற்கள் பறிக்கப்பட்டு மூன்று மாத காலமாகியும் திருத்தப்படாமல் உள்ளது.

கற்கள் போடப்பட்ட நிலையில் வீதி முறைகளைக் கடைப்பிடிக்க முடியாமலே விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஏழாலை மக்கள் இதனால் பெரும் சிரமம் அடைகின்றனர். (த-33)

## காவலரண் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வழைச்சேனை-வாகரை வீதியிலுள்ள மாங்கேணி முகாம் இராணுவ காவரண்மீது நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைககுண்டுத் தாக்குதல் நடத்தபபட்டுள்ளது.

இத் தாக்குதலில் காயமடைந்த இராணுவச் சிப்பாய், பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-4)

## ஆனந்த குணசேகர பதவி நீக்கம்

இலங்கை மின்சார சபை வாரியத்தின தலைவர் ஆனந்த குணசேகர நேற்றுமுன்தினம் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

தொழிற்சங்கங்களுடனான முரண்பாட்டையடுத்தே ஆனந்த குணசேகரவை மின்சாரத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நீக்கியுள்ளார்.

ஆனந்த குணசேகரவை நீக்க வேண்டும் என்று மின்சார சபை பொறியிலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்து வந்ததாகவும தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## ஓவியக் கண்காட்சியும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரக் கலைத்துறையினர் இம் மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் பேசும் தூரிகை எனும் ஓவியக் கண்காட்சி ஒன்றினை நடாத்தவுள்ளனர்.

இதில் முகிழ்நிலை ஆசிரியர்களால் ஆக்கப் பெற்ற படைப்புககள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கண்காட்சி தொடக்க நாள் நிகழ்வில் 'துகிலிகை' காலாண்டு ஓவிய சஞ்சிகையும் வெளியிடப்படும். சித்திரக் கலை பாட நூல்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இச் சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

சித்திரப்பாடம் பயிலும மாணவர்களுக்கு இக் கண்காட்சி பிரயோசனமான முறையில ஒழங்குபடுத்தப்பட்டுள்ளதுடன் பாடவிடயங்கள் சார்ந்த விளக்கங்களும அளிக்கபபடவுள்ளன.

தீவகம், தென்மராட்சி, யாழ்.வலயப் பாடசாலைகள் வெள்ளிக்கிழமையும், வடமராட்சி, வலிகாமம் கல்வி வலய பாடசாலைகள் சனிக்கிழமையும கண்காட்சியைப் பார்வையிட வருவதன் மூலம் சிரமமின்றி விளக்கங்களைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## எம்.பிக்களுக்கு தீர்வையற்ற வாகனம்; அரசுக்கு ரூ.258 கோடி வரி இழப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ள தீர்வையற்ற வாகனங்கள் காரணமாக அரசாங்கத்தறகு கோடிக்கணக்கான வரிவருமானம் இழக்கநேரிடும் எனறு தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும 225 உறுப்பினர்களுக்கும அரசாங்கம் தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய 258 கோடியே 49 இலட்சத்து 68 ஆயிரம ரூபா வரி கிடைக்காமல் போகும்.

இங்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் முழுப் பெறுமதி சுமார் 35 இலட்சம் ரூபாவாகும. இந்த வாகனங்களுக்கு விதிக்கப்படும் 325 வீத வரியுடன் சேர்த்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான வாகனப் பெறுமதி ஒரு கோடியே 14 இலட்சத்து 88 ஆயிரத்து 750 ரூபா வரிகும்.

அதேநேரம், இவ்வாறான வாகனத்தின் உண்மை சந்தைப் பெறுமதி ஒரு கோடியே 49 இலட்சத்து 88 ஆயிரத்து 750 ரூபாவாகும் எனறும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-4)

# சச்சின்

**மீள் பார்வை** — என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

அடுத்த சில நாட்களுக்குள் நிஜ கிரிக்கெட்டுக்குத் தயாராகி விட்டான் சச்சின். அவனுக்கென்று கிரிக்கெட் உபகரணங்கள் வாங்கப்பட்டன. அப்பா அவனைக் கடைக்கு அழைத்துச் சென்று வெள்ளைச் சட்டையும் பேன்ட்டும் வாங்கித்தந்தார். அக்கா சவீதாவும் அவரது கணவரும், அவனுக்கென்று கிளவுஸ் (கையுறைகள்) வாங்கி வந்தார்கள். பளிச்சென்ற வெண்ணிற உடையில் சிறுவன் சச்சின் குடும்பத்தில் எல்லோரின் பாதங்களையும் தொட்டு வணங்கி,



தன்னை விடப் பெரியதான "கிரிக்கெட் கிட்" பையைத் தோளில் ஏந்தியபடி அன்றைய பயிற்சிக்குச் சென்றான். அன்று தொடங்கிய பழக்கம் இன்று வரை தொடர்கிறது. எந்த முக்கிய போட்டி யானாலும் சச்சின் தன் குடும்பத்தினரின் ஆசி பெறாமல் கிளம்புவதில்லை.

சச்சின் அப்போது பாந்த்ராவிலேயே, இந்தியக் கல்வி நிறுவனத்தின் ஆங்கிலப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். அது நல்ல பள்ளிதான் என்றாலும், அவர்களுக்கென்று தனியான கிரிக்கெட் அணி எதுவும் இருக்கவில்லை. ஆகவே சச்சின் எத்தனை கற்றுக்கொண்டு நன்றாக விளையாடினாலும், பள்ளியில் அவனை ஊக்குவிப்பவர்கள் யாருமில்லை. அது அச்ரேகருக்குப் பெரிய குறையாகத் தெரிந்தது.

ஏனெனில், மும்பை கிரிக்கெட் கலாசாரத்தின்படி ஒரு பையனின் ஆட்டத் திறமை வெளியுலகத்துக்குத் தெரிய வேண்டுமானால், அவன் முதலில் தன் பள்ளி அணிக்காக விளையாடவேண்டும். நகரெங்கும் பள்ளி களுக்கிடையிலான போட்டிகள் எப்போதும் பரபரப்பாக நடந்துகொண்டே இருப்பதால், பையன்கள் தங்கள் திறனை வெளிப்படுத்துவதற்கான நல்ல வாய்ப்புகள் அப்போதுதான் கிடைக்கும். பள்ளி அளவில் நன்றாக விளையாடிய பின்னர் கல்லூரி அணி, பல்கலைக்கழக அணி என்று மெல்ல மெல்ல மேலே போகலாம். கவாஸ்கர் போன்ற ஜாம்பவான்கள் கூட இப்படி முன்னேறி வந்தவர்கள்தான்!

ஆகவே கிரிக்கெட்டுக்கு முக்கியத் துவம் தரும் வேறொரு பள்ளிக்கு சச்சினை மாற்றவேண்டும் என்று அச்ரேகர் விரும்பினார். அஜித் டெண்டுல்கரிடம் அந்த யோசனையைச் சொல்லி, தாதரில் இருக்கும் சாரதாஷ்ரம் ஆங்கிலப் பள்ளியையும் சிபாரிசு செய்தார் அவர்.



அதுவரை சச்சினின் கிரிக்கெட் ஆர்வத்தை மவுனமாக ஆதரித்து வந்த அவரது பெற்றோரை இப்போது பெரிய கவலை பிடித்துக்கொண்டது. கிரிக்கெட்டுக்காக நல்ல பள்ளிக் கூடத்தை மாற்றுவதா என்று தயங்கினார்கள் அவர்கள், படிக்கிற பையனின் எதிர்காலத்தை வெகுவாகப் பாதிக்கக் கூடிய முடிவு அது. இதே பள்ளியில் தொடர்ந்து படித்தால் சச்சின் ஒரு இன்ஜினீயராகவோ, மருத்துவராகவோ ஆகக்கூடும். ஆனால் சாரதாஷ்ரம் பள்ளிக்கு மாறினால், கிரிக்கெட்தான் இனிமேல் எல்லாம் என்று முடிவுசெய்து விட்டது போல் அர்த்தமாகிவிடும். அந்த அளவுக்கு கிரிக்கெட்டுக்குப் புகழ் பெற்ற பள்ளி அது.

சச்சினின் அப்பா பேராசிரியர் ரமேஷ் டெண்டுல்கருக்கு கிரிக்கெட்டில் அவ்வளவாக ஆர்வமில்லை. ஆனால் மகனுடைய ஆர்வத்தை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. நீ எதைத் தேர்ந்தெடுத்தாலும் பரவாயில்லை. உன்னுடைய துறை எதுவானாலும் அதில் உண்மையாக இரு. அவ்வளவுதான்! என்று சச்சினுக்கு முழு சுதந்திரம் கொடுத்துவிட்டார். அவர் அம்மா ரஜினி டெண்டுல்கரும் மகனை எதற்கும் வற்புறுத்த விரும்பவில்லை. ஆகவே, இந்த விஷயத்தில் முடிவெடுக்கவேண்டிய முழுப் பொறுப்பும் சிறுவன் சச் தலையில் விழுந்தது.

ஆனால் சச்சின் ரொம்பவும் யோசித்ததாகத் தெரியவில்லை. அந்த அளவுக்கு கிரிக்கெட் ஆர்வம் அவனுக்குள் எங்கும் ஊடுருவிப் பரவியிருந்தது. சாரதாஷ்ரம்தான் நான் கிரிக்கெட்டில் முன்னேறுவதற்கான ஏணி என்றால், அந்தப் பள்ளிதான் வேண்டும் எனக்கு! தினமும் அதிகாலையிலேயே கிளம்பவேண்டுமா? பரவாயில்லை! தாதருக்கு நேரடிப் பேருந்து இல்லாததால் இரண்டு பஸ்கள் மாறிப் போக வேண்டுமா? பரவாயில்லை! இப்போதைய பள்ளியின் நண்பர்களை எல்லாம் பிரியவேண்டுமா, பரவாயில்லை. சச்சினின் உலகம், கிரிக்கெட்டையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தாலும், அன்பான குடும்பத்தின் முழு ஆதரவும் அரவணைப்பும் அவனோடு இருந்ததாலும், கிரிக்கெட்டுக்காக எதையும் இழக்கத் தயாராயிருந்தான் அவன்.

சீக்கிரத்திலேயே சாரதாஷ்ரம் பள்ளியில் சச்சின் சேர்ந்தான். அந்தப் பள்ளியின் கிரிக்கெட் அணிக்கு அச்ரேகர்தான் பயிற்சியாளராக இருந்தார். ஆகவே பள்ளி அணியில் சச்சின் இடம்பிடிப் பதில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்கவில்லை.

சாரதாஷ்ரம் பள்ளியில்தான் சச்சின் முதன்முறையாக வினோம் காம்ப்ளியைச் சந்தித்தான். சச்சினைவிட ஒரு வயது பெரியவன். காம்ப்ளி அந்த வயது வித்தியாசம் தெரியாதபடி கிரிக்கெட் அவர்களை இணைத்தது. இருவரும் பள்ளி அணியில் ஒன்றாகச் சேர்ந்து, அச்ரேகர் சாரிடம் ஒன்றாகக் கற்றுக்கொண்டு, ஒன்றாக விளையாடி, ஒன்றாகக் குறும்புகள் செய்து, ஒன்றாக சாதனைகளும் செய்தார்கள். இணையில்லாத பேட்டிங் திறமையினால் இருவரும் அச்ரேகரின் செல்லப் பிள்ளைகளாகவே ஆனார்கள்.

சாரதாஷ்மில் சேர்ந்தபின் சச்சினுக்கு இருந்த ஒரே ஒரு பிரச்சினை. போக்குவரத்து. தினமும் பாந்த்ராவிலிருந்து சிவாஜி பார்க்கும் பஸ்ஸில் வந்து. பள்ளிக்குக் கிளம்பும்வரை ப்ராக்டீஸ். அதன் பின் பள்ளி வகுப்புகள். மதியம் மற்றும் மாலையில் மீண்டும் பயிற்சி என்று ஓய்வில்லாமல் ஓடியாடி விட்டு, இருட்டிய பிறகு மறுபடி பஸ்ஸில் அலைந்து திரிந்து வந்து தூங்கத்தான் அவனுக்கு நேரம் சரியா இருந்தது.

# எமக்கு உரியதீர்வு கிடைக்காவிட்டால் எமது போராட்டம் மேலும் வலுப்பெறும்

## நுண்கலைத்துறை மாணவர்கள் அறிக்கை

இராமநாதன் நுண்கலைத்துறையில் 2004ஆம் ஆண்டு நான்காம் வருடத்தினைப் பூர்த்திசெய்த மாணவர்களாகிய நாம் எமது இறுதிவருடத்தினை நிறைவு செய்து அதன் பெறுபேற்றினையும் பெற்றுள்ளோம். இப்பரீட்சையிலே பிரதான பாடமாகிய வாய்ப்பட்டிலே பல மாணவர்கள் திட்டமிட்டு பழிவாங்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததொரு விடயம் இந்நிலையில் எமக்கான நீதியான தீர்வொன்றை வேண்டி எம்மாலும் எமது மாணவப்பிரதிநிதிகளாலும் படிப்படியாக எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளுக்குமான தீர்வு ஏமாற்றகரமாக அமைந்தமையால் சாத்வீகப் போராட்டமொன்றை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என தமது பரீட்சைப் பெறுபேற்றில் அநீதி இழைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்து நேற்று முன்தினம் முதல்சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இராமநாதன் நுண் கலைத்துறையில் கடந்த வருடம் இறுதி வருடத்தில் கல்விகற்ற மாணவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்.

எமது துறையில் திட்டமிட்டுப் பழிவாங்குதல் என்பது தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் ஒரு விடயமாகும். எமது பரீட்சையில் இடம்பெற்றது என்னவெனில்,

* வழமைக்கு மாறான பரீட்சை நிலைய ஒழுங்கு (சமநிலை பேணப்படாமலும், வழமையாக இறுதிப் பரீட்சையில் 05 பரீட்சைகள் இருக்கும் இடத்தில் 02 பேர் மாத்திரம் இருந்தமை) சம்பந்தாமக துறைத் தலைவரிடம் சில மாணவர்கள் சென்று கதைத்த போது மாணவர்களின் கதையைப் புறக்கணித்தது மாத்திரமன்றி, "நீங்கள் சொல்வது போல் நாங்கள் நடக்கமுடியாது... எங்களை மீறி நீங்கள் பாஸ்பண்ணப்போற கெட்டித்தனத்தை நாங்கள் பாக்கத் தானே போறம் என்று கூறினார்.

* பரீட்சைப் பெறுபேற்று புள்ளி நடவடிக்கையின் போது பென்சிலினால் புள்ளிகளை அடையாளப்படுத்துவது மட்டுமன்றி தமக்குள் கலந்துரையாடி புள்ளிகளை மாற்றியமைத்தல்.

* ஒரு பரீட்சார்த்தியைப் பரீட்சித்துக் கொண்டிருக்கும்போது ஒரு பரீட்சகர் வெளியில் சென்று முடிவுறும் நேரத்தில் வந்து புள்ளியிடுதல் எவ்வாறு சாத்தியம்?

பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பரீட்சார்த்தி பற்றி நடுவர்கள் தமக்குள் உரையாடுவது மாத்திரமன்றி பரீட்சார்த்தியின் தனிப்பட்ட விடயத்தை மனோநிலை பாதிக்கும் வண்ணம் கதைத்தல்.

இவ்வாறான நடவடிக்கைகளால் எமது தகுதிக்குரிய பெறுபேறுகள் எம்மை வந்தடைவதில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களாகிய நாங்கள் எமக்குரிய தகுந்த தீர்வினைப்பெறும் நோக்குடன் துறைத் தலைவியிடம் முறையிட்டு, தீர்வைப் பெற முடியாத பட்சத்தில் கலைப் பீடாதிபதி, சிரேஷ்ர மாணவ ஆலோசகர் துணைவேந்தர் ஆகியோருக்கு பல தடவைகள் முறையிட்டதோடு 14-06-2005, 09-08-2005ஆகிய தினங்களில் எழுத்துமூலமாகவும் எமது முறைப்பாடுகளைச் செய்திருந்தும் எதுவித பலன்களும் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் 24-08-2005இல் கலைப்பீட மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றிற்கு எமது பிரச்சினைகளை எழுத்துமூலமாகவும் நேரடியாகவும் தெரியப்படுத்தியிருந்தோம்.

மாணவப் பிரதிநிதிகள் எமது பிரச்சினைகளை முழுமையாக ஏற்று அதற்குரிய தீர்வினைப் பெறும் நோக்குடன் இதுவரை காலமும் மாணவப் பிரதிநிதிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை என்பதைத் தெளிவாக அறியத்தந்திருக்கின்றார்கள் இவ்வாறான இழுத்தடிப்பிற்கும் பிரச்சினைக்கான தீர்வின்மைக்குமான முழுப்பொறுப்பும் எமது கலைப்பீடாதிபதியையும் துணைவேந்தரையுமே சாரும்.

மாணவர்களாகிய நாங்கள் சாத்வீகப்போராட்டத்திற்குரிய திகதியை பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு தெரியப்படுத்திய பின் துணைவேந்தரால் நடத்தப்பட்ட கலந்துரையாடலில்,

"உங்களது மனதை நீங்கள் தேற்றிக்கொள்ளுங்கள் நாளைக்குப் பெற்றாரைக்கூட்டிக்கொண்டு வாருங்கள்"

என்ற பதில் மாத்திரமே எமக்குக் கிடைத்தது இவ் வேளையில் பட்டமளிப்பு விழா நெருங்கிக் கொண்டு இருப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கால அவகாசம்போதாது என்று கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாததொரு விடயமாகும். ஏனெனில் எமது பிரச்சினை களை 14-06-2005 அன்றிலிருந்து பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியது மாத்திரமன்றி எமககுரிய தீர்வினைப் பெறும் நோக்கில் பல வழிமுறைகளை (விசேட பரீட்சை வைத்தல், விசாரணை மேற்கொள்ளல்) முன் வைத்திருந்தும் இதுவரை எவராலும் எதுவித தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக மாணவர்களாகிய நாங்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் எமது பிரச்சினைக்கு நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் எந்தவிதமான தீர்வும் கிடைக்கப் பெறாததால் எமக்குரிய தீர்வினைப் பெறுவதற்காக போராட வேண்டிய இக்கட்டான நிலைக்கு மாணவர்களாகிய நாம் தள்ளப்பட்டுள்ளோம். எமக்குரிய பரீட்சைப்பெறுபேற்றை இவ்வாறான போராட்டங்களை நடத்தித்தான் பெறவேண்டுமெனும்நிலை எம்மை மிகவும் வேதனைக்குள்ளாக்கியதுடன் விரும்பியோ விரும்பாமலோ இவ்வாறான இக்கட்டான நிலைக்கு நாம் இட்டுச் செல்லப்பட்டுள்ளோம்.

இத்தகைய எமது போராட்டமானது பட்டமளிப்பை எதிர்பார்த்திருக்கும் சக மாணவர்களை வெறுப்பு நிலைக்கு இட்டுச்செல்லலாம்? இருந்தபோதும் நாம் பல்வேறு வழிகளிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதை நீங்கள் அறிவீர்கள். அண்மையில் நடைபெற்ற நேர் முகத்தேர்வு, வேலைவாய்ப்புக்களை அடைய முடியாமல் போனது வாழ்க்கைப் பின்னடைவை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் மிகவும் பலவீனம் அடைந்துள்ளோம்.

இந்நிலையிலிருந்து மீள்வதற்காக எம்மால் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பலனளிக்காத பட்சத்தில் இறுதிக்கட்டநகர்வான போராட்டநிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டுள்ளோம். எமது நியாயமான கோரிக்கைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புவதுடன் இத் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து எம்மை மீட்டெடுத்து பட்டமளிப்பு விழாவில் தங்களில் ஒருவராக இணைத்துக்கொள்வீர்கள் எனும் நம்பிக்கை எம்மிடத்தில் உள்ளது.

எமக்கு சரியனதும் நியாயமானதுமான தீர்வு உடன் கிடைக்கப்பெறாதவிடத்து பல்கலைக்கழக நிர்வாக செயற்பாடுகளைப் பாதிக்கும் வகையில் எமது போராட்டம் விரிவடைந்து செல்லும் என்பதனையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். - (த-19)

# மகேஸ்வரன் -ஆறுமுகம் மோதல் தொடர்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் தங்களது ஆதரவைத் தெரிவிப்பதற்காக இரு கட்சிகளிடமும் பெருந் தொகைப் பணத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் பேரம்பேசி வருவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை அக்கட்சி மறுத்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் துணைத் தலைவர் ஆர்.யோகராஜா இது குறித்து கூறியதாவது,

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக கட்சித் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நாளை புதன்கிழமை ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவிக்கவுள்ளார்.

இரு பிரதான கட்சிகளிடமும் பேரம் பேசி வருவதால்தான் முடிவை அறிவிக்க தொண்டமான் தமதப்படுத்துவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமனற உறுப்பினர் மகேஸ்வரன் கூறிவருவது உண்மையல்ல. அவ்வளவு கேவலமான எமது கட்சி அதிக வாக்கு வங்கிகளைக் கொண்ட அதிகமான தொகையைக் கொண்டது எங்கள் கட்சி என்று அவர் கூறினார்.

இதனிடையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்குப் பதிலளித்துள்ள மகஸேஸ்வரன் நுவரெலியா உள்ளிட்ட எந்தத் தொகுதியிலும் ஆறுமுகம் தொண்டமானை எதிர்த்து நாடாளு மன்றத் தேர்தலல் தான் போடடியிட தயாராக உள்ளதாகவும் தனது சவாலை இ.தொ.க.ஏற்குமா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. (ற)

# சிறீபதி சூரியராச்சியின் கருத்துகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கடும் கண்டனம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆதரவு தொடர்பாக பிரதி அமைச்சர் சிறீபதி சூரியராச்சி தெரிவித்திருக்கும் கருத்துகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி கருத்துத் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவை விட தேவையான ஆதரவு தற்போதே சுதந்திரக் கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கிறது என்று சிறீபதி சூரியராச்சி கூறியுள்ளார்.

தனது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிட சிறீபதி சூரியராச்சிக்கு உரிமை உண்டு. எங்களது ஆதரவு முக்கியமானதாக இல்லையெனில் ஏன் எங்களுடன் சுதந்திரக்கட்சி பேச்சுக்கள் நடாத்த வேண்டும்? பொதுக் கூட்டங்களில் ஒரு பேச்சும் எங்களிடம் ஒரு பேச்சுமாக சுதந்திரக்கட்சியினர் பேசி வருகின்றனர்.

சுதந்திரக்கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே பேச்சுகள் நடைபெற்று வரும் நிலையில் சூரியராச்சியின் இதுபோன்ற கருத்துகளை அப்பேச்சுக்களை சீர் குலைக்கும் நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம்.

இருந்தபோதும் சூரியராச்சியின் கருத்துகளை முஸ்லிம் காங்கிரஸ் பொருட்படுத்தவில்லை. மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முஸ்லிம் காங் கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையேதான் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என்றார்.

## இன்று ஒரு தகவல்

# பயம்

பயம் என்றால் ஒருவித உணர்வு என்றே கணிக்கப்படுகின்றது. இவ்வுணர்வு உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் இருப்பதாகவே கருதப்படுகின்றது. ஆனால் மனித இனத்துடன் ஒட்டியிருப்பது போல விலங்கினங்களுக்கு இப் பயவுணர்வு இருப்பதில்லை என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். விலங்கினங்கள் தம்மின எதிரிகளைக்காணும் போது மட்டுமே பயப்படுகின்றனவாம். மனிதர்களும் இப்படியா? அனேகமானோர் எந்த நேரமும் எதை எதையோ நினைத்து பயந்து கொண்டே இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இப் பயத்தினால் நாம் உடல் உள ரீதியாக பெரிதும் பாதிக்கப்படுகிறோம் என்பதைப் பலர் அறிவதில்லை. இது மட்டுமா? சிலரின் வாழ்க்கையும் கூட பின் நோக்கித் தள்ளப்படுகின்றன.

இன்றைய மாணவர்கள் பலரைக் கவனித்துப் பர்ருங்கள் பாடசாலை என்றும் தனியார் கல்வி நிறுவனம் எனறும் ஓடியோடி இரவு பகலாகப் படிப்பார்கள் பரீட்சைக்குரிய காலம் வந்து விட்டாற்போதும் அவர்களை ஏதோ ஒருவித பயம் மோதும். அதன் பின் ஒருவித பதட்டம் ஏற்படும். கைகளும் நடுங்கும். இதயமும் விரைவாக அடிக்கும் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டும். இந்நிலையில் படித்தயாவற்றையும் மறந்து அரைகுறையாக விடையளித்து சிறந்த பெறுபேறுகளைப் பெறத் தவறுகிறார்கள். இது பயத்தினால் வந்த பின்னடைவுதானே?

இம் மாணவர்களின் பயத்திற்கு அவர்களின் குடும்பத்தினரும் ஒரு காரணியாக இருப்பதாக உளவள மருத்துவ நிபுணர்கள் ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளார்கள். இது முற்றிலும் உண்மையானதே என்பதை நாம் சில குடும்பங்களில் நேரிற் காணக்கூடியதாகவுள்ளது. வளர்ந்த குழந்தைகள் அழும்போது அது ஏன் அழுகிறது-? என்பதை அறிந்து அதை நிவர்த்தி செய்யாமல் 'அழுதால் பேய்வரும்' 'பிசாசு வரும்' என வெருட்டி அடக்குகிறார்கள். இப்படி வளர்க்கப்படும் குழந்தைகளில் அனேகம்பேர் காலம் முழுவதும் பயம் நிறைந்த சுபாவமுள்ளவர்களாகவே இருப்பார்களாம்.

இதையுணர்ந்த நம்மிற் பலரறிந்த யதார்த்தமான நிகழ்வொன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மாபெரும் வீரன் நெப்போலியன் என்ற பெயரை அதிகமானோர் அறிந்திருப்பீர்கள். இவன் சிறுவனாக இருக்கும் போது சிலவேளைகளில் தன் வீட்டினருகேயுள்ள சிற்றாறொன்றில் தூண்டில் மூலம் மீன்களைப் பிடித்து விளையாடுவது வழக்கம். ஒரு நாள் மாலை நேரம் இருள் சூழும் வேளையில் மகனைக் காணவில்லையென்று அவனின் தாய் தேடிச் சென்ற போது ஆற்றங்கரையில் தூண்டிலும் கையுமாகவே நின்றான். அப்போது அவனைப் பார்த்த தாய் "இருளும் வந்து விட்டது உனக்குப் பயம் வரவில்லையா?" என்று கேட்டாள். ஒரு கணம் யோசித்தவன் "பயம் என்றால் என்னம்மா? என்று ஆச்சரியத்துடன் கேட்டான். அப்போது தாய் இன்று நானொரு தவறான வார்த்தையொன்றைச் சொல்லி விட்டேனே என்பதையுணர்ந்து அதைச் சமாளிக்கும் நோக்குடன் "பயம் என்றொரு மீன் இருக்கிறது. அது உன் தூண்டிலில் அகப்படவில்லையா-? என்றுதான் கேட்டேன்" என்றார்.

இந்நிகழ்விலிருந்து நாம் எதை அறிந்துகொள்கிறோம்-? நெப்போலயனின் தாய் தன் மகனை பயம் என்ற வார்த்தையே தெரியாமல் வளர்த்து வந்தமையாலேயே அவனொரு பிரபலியமான வீரனாகவும் சரித்திர நாயகனாகவும் வர முடிந்தது என்ற உண்மை புலனாகிறது.

இவ்வுண்மையை அறிந்த பின் எமது பிள்ளைகளையும் பயமென்ற உணர்வில் சிக்கிக்கொள்ளாமல் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? உண்மைதான் எதற்குமே பயப் படாமலிருப்பவர்கள் என்றும் சுகதேகிகளாகவும், இளமைக் கோலத்துடனும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இப்படியே காலம் முழுவதும் பயப்படாமல் நாமெல்லோரும் வாழலாமா-? என்பதைப் பற்றி சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இன்றைய காலகட்டத்தில் பல சந்தாப்பங்களில் பயப்படவேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இவைகளுள் ஓரிரு சந்தர்ப்பங்களை நினைவு கூருவோம். ஆழிப்பேரலை மீண்டும் வரப் போவதாக ஒரு செய்தி வரும்போதும், எம்மினத்துக் கெதிராக யுத்தமொன்று தொடங்குவதற்கான அறிகுறிகள் காணப்படும் போதும் யாரென்றாலும் பயப்படாமலிருக்க முடியுமா? எமது சூழலிலுள்ளவர்களே பரபரப்படையத் தொடங்கிவிடுவார்கள். அதன் பின் நாமும் என்ன செய்வது-? எங்கே போவது-? என்ற நிலையில் தவிக்க வேண்டிய நிலைதான் ஏற்படும். இவ்வேளைகளில் என்ன செய்யலாம்-?

இதற்குத்தான் இலகுவான வழியொன்றுண்டு. அது என்னவென்று கேட்கிறீர்களா-? நாமெல்லோரும் 'எல்லாம் அவன் செயல்' 'அவனன்றி அணுவும் அசையாது' என்று சொல்லுகிறோமே இதில் அவன் யார்-? எம்மைப் படைத்து, காத்து, அருள்புரியும் மகாசக்தி வாய்ந்த இறைவனைத்தானே குறிப்பிடுகிறோம். இந்த இறைவன் மீது அசையாத நம்பிக்கை வையுங்கள் இறைவன் எம்மீது கவனம் கொள்வதற்காக தினமும் தனித்தும் ஒரு மித்தும் பிரார்த்தனை செய்யுங்கள். அதன்பின் எத்துன்பங்களுமே எம்மை அணுகமாட்டாது. இயற்கை அனர்த்தங்கள் வந்தாலும் கூட நாம் அதிலிருந்து தப்பிவிடுவோம். இதன் பின்பும் எதற்காவது பயப்பட வேண்டுமா-? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

எழுது மட்டுவாளூர் எஸ்.எஸ். காசிப்பிள்ளை

---

# பிரசாரச் சுவரொட்டிகளை அகற்றுவதற்கான காலக்கெடு நாளை நள்ளிரவுடன் பூர்த்தி

## நாளைமுதல் நாடுமுழுவதும் 1000 வீதித்தடைகள் ஏற்படுத்தப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசார சுவரொட்டிகள், பதாதைகள், கட் அவுட் என்பன நாளை நள்ளிரவுடன் அப்புறபபடுத்தப்பட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இவ் உத்தரவுக்கு ஏற்ப நாளை நள்ளிரவுக்குள் இவற்றை அப்புறப்படுத்தாத கட்சி அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கட்சி பேதமின்றி கைதுசெய்யப்படுவர் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு தேர்தலுக்கான பொலிஸார் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிக்கை அனுப்பியுள்ளனர்.

இவ் உத்தரவைச் செயற்படுத்தும் முழு அதிகாரமும் அந்தந்தப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தாத அதிகாரிகளுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும் 7ஆம் திகதிக்கு முன்னர் நாடு முழுவதும் இருக்கும் சுவரொட்டிகள், பதாதைகள், கட் அவுட்களை அப்புறப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதுபற்றி ஏறகனவே கட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களாகவே அவற்றை அப்புறப்படுத்தாவிடில் அவற்றை பொலிஸார் அப்புறப்படுத்துவார்கள் எனவும் தெரிவித்தார்.

அமைதியான நேர்மையான தேர்தலொன்றை நடத்துமுகமாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தேர்தலின்போது பொலிஸார் பக்கச்சார் பின்றி நடந்து கொள்ளல் மற்றும் அவர்களின் கடமைகள் என்பன குறித்து அதிகாரிகளை தலைமயகத்திற்கு அழைத்து தற்போது அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காமினி நவரட்ண மேலும் தெரிவித்தா.

இதனிடையே, பாதுகாப்புக் காரணங்களுக்காக நாளை முதல் நாடு முழுவதும் ஆயிரம் வீதித்தடைகள் ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-4)

# நாகர்கோவிலில் புலிகளின் புதிய கட்டுமானங்கள் எதுவும் இல்லை -கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

நாகர்கோவில் முன்னரங்குப் பகுதியிலிருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் இராணுவத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

அப்பகுதியில் சுமார் 15 மீற்றர் முன்நோக்கி வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் அந்த முன்னரங்கப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் பாதுகாப்புப் படையினர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி முதல் செங்கற்களைக் கொண்டுவந்து அங்கு நிர்மாண நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருவதாகவும் அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் புதிய கட்டுமானங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை என்று இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ள[illegible]

நாகர் கோவில் முன்னரங்கப் பகுதியில் தங்க[illegible] விடுதலைப் புலிகள் அச்சுறுத்துவதாக கண்காணிப்புக்குழுவில் இராணுவத்தினர் செய்த முறைப்பாடு குறித்து ஊடகவியலாளர்களிடம் பேசிய கண் காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஓலட்ஸ்டொ பிடிர் யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி எவ்வித விரிவாக்கப் பணிகளையும் எந்தத் தரப்பினரும் மேற்கொள்ளக்கூடாது. இராணுவம் அளித்துள்ள புகாரின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இராணுவப் பேச்சாளர் நளின் விதரணக இந்த முறைப்பாட்டை செய்திருந்தார். இருப்பினும் சர்ச்சைக் குரிய பகுதியில் எதுவித புதிய கட்டுமானப் பணிகளும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(ற-4)

# வட-கிழக்கில் பணியாற்றும் பொலிஸாருக்கு நவம்பர் 18வரை லீவுகள் யாவும் ரத்து

வடக்கு-கிழக்கு பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி வரை தமது கடமைகள் முடிந்தாலும் வீடுகளுக்குச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இவ் உத்தரவு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகிறது.

தனியார் வீடுகளில் தங்கியிருந்து கடமைக்குச் செல்லும் பொலிஸார் கடமை முடிந்தபின்னரும் காவலரண்களிலேயே தங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதம் 18ஆம் திகதிவரை இந்த உத்தரவு அமுலில் இருக்கும். இதுபற்றிய அறிவிப்பு வடக்கு-கிழக்கிலிருக்கும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

தேர்தல் சமயத்தில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் அவற்றைக் கட்டுப்படுத்த வசதியாகவே பொலிஸாரை அங்கேயே வைத்திருப்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளினதும் விடுமுறைகளும் எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதிவரை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

(ற-4)

# மலையக மக்களின் நியாயமான கோரிக்கைகளை பேரினவாதக் கட்சிகள் இரண்டும் நசுக்குகின்றன

## புதிய ஜனநாயகக் கட்சி கடும் கண்டனம்

(கொழும்பு)

மலையக மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் போராட்டங்களையும் நசுக்குவதற்கு இரண்டு பேரினவாதக் கட்சிகளும் காலத்திற்குக் காலம் பேரினவாதக் குண்டர்களையும், காடையர்களையும் பயன்படுத்தி வந்துள்ளன. அவ்வாறான ஒரு செயற்பாடாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை தலவாக்கலையில் இடம்பெற்ற மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது குண்டர்களை ஏவி குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது என புதிய ஜனநாயகக்கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான அராஜக நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேன் மேலும் மலையக மக்களின் கோரிக்கைகளுக்கு எதிராக ஏவி விடப்படக்கூடிய அபாயத்தை எமது கட்சி தூர நோக்குடன் சுட்டிக்காட்டுகிறது. இதற்கு மலையக மக்கள் எவ்வகையிலும் இடமளிக்கக் கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும் என புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இரண்டு பேரினவாதக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிப்பதற்கு மலையகத்தின் இரண்டு பிரதான அரசியல் தொழிற்சங்கத் தலைமைகள் போட்டி போட்டுக்கொண்டு முன்னிற்கின்றன. ஆனால், மலையகத்தின் பிரதான பிரதேசமான தலவாக்கலையில் அழிவுகளைத்தரும் வகையில் அமைய இருக்கும் மேல் கொத்மலைத்திட்டத்தை எதிர்ப்பதற்குப் பதிலாகத் தமது புறமுதுகையே இத் தலைமைகள் காட்டிவருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவரோ அன்றி அக்கட்சி உறுப்பினர்களோ எவரும் அதில் பங்கு கொள்ளவில்லை. அதேவேளை, எமது கட்சியின் மலையகச் செயலாளர் ச.பன்னீர்செல்வம், மற்றும் எனது தலைமையில் நடத்தப்பட்ட போராட்டத்தில் மலையக மக்கள் பெரும் தொகையில் பங்குகொண்டு மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான இயக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர் அதே போன்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் புகையிரத நிலைய ஊழியர் ஒன்றியத் தலைவர் சரத் பெர்ணாண்டோ, மீனவர் சங்க சமாஜத் தலைவர் எஸ்.விஜயரட்ணம், சமூக சேவையாளர் செல்வி மேகலா சண்முகம், பிதா கீத பொன்கலன் ஆகியோர் மற்றும் தொழிலாளர்கள், இளைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை தெரிவித்தனர் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

ஒருவன் தான் பெற்ற சுதந்திரத்தை மற்றவர்களுக்குப் அளிக்க மறுத்தால் அவன் அயோக்கியன், களங்கமுள்ளவன்.
-இங்கர்சால்

வலம்புரி

## பாதுகாப்புச் செலவினைக் குறைக்கவே முடியாதா?

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை 2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நவம்பர் மாதத்தில் சமர்பிக்கவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசுக்கான ஆதரவை ஜே.வி.பி.விலக்கிக் கொண்ட போதிலும் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றில் நிறைவேறுவது உறுதி. ஆனால் அடுத்த ஆண்டின் வரவுசெலவுத்திட்டமாவது நாட்டின் அபிவிருத்திக்கு-வறுமைப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு ஏதேனும் வழிதருமா என்றால் அதுதான் இல்லை.

பாதுகாப்பு செலவீனம் 7ஆயிரம் கோடிரூபாவை எட்டும் என்ற அதிர்ச்சி செய்தியோடுதான் 2006இன் வரவுசெலவுத் திட்டம் பிரசவமாகப் போகின்றது.

உள்ளூர் உற்பத்தி, சுயதொழில் வாய்ப்பு வளங்களின் உச்சப் பயன்பாடு, சுயபொருளாதாரம் இப்படி எத்தனையோ விடயங்கள் இருக்கின்ற போதிலும் அதுபற்றி எள்ளளவேனும் கருத்தில் கொள்ளாமல் 'பாதுகாப்பு' என்பதிலேயே செலவீனத்தின் பெரும் பகுதி உள்ளடக்கப்படுகின்றது.

உலக நாடுகளுடன் யுத்தம் புரிகின்ற நாடுகள் கூட இந்த அளவிற்கு பாதுகாப்பு செலவீனத்தை அதிகரித்தது கிடையாது.

சிறிய நாடான இலங்கை, இத்துணை தூரம்-வருடம் வருடம் பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்து வருவதற்கான காரணம் தான் என்ன? இலங்கை என்ற நாடு தமக்குரியது, இங்கு பௌத்த சிங்களவர்களைத் தவிர மற்றைய இனங்களை சார்ந்தவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளே என்ற நினைப்பே பாதுகாப்பு செலவீனம் தொடர்ந்து அதிகரிப்பதற்கான காரணமாகும்.

[ஐ]க்கிய தேசிய முன்னணி அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கும்போது எதற்காக பாதுகாப்பு செலவினம் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆக, யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்தாலும் அரசு என்ற அந்தஸ்துடன் பாதுகாப்பு என்ற பெயரில் மீண்டுமோர் யுத்தத்திற்கான ஆயத்தத்தைச் செய்வதே இலங்கை அரசுகளின் நோக்கமாகும்.

இதனாலேயே பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு பாராளுமன்றில் பிரதிநிதித்துவம் பெறும் சகல சிங்கள கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஆதரவு வழங்குகின்றன.

இவ்விதம் பாதுகாப்புச் செலவினம் எவ்வளவுதான் அதிகரித்தாலும் அதற்கு சிங்களக் கட்சிகளிடம் இருந்து எதிர்ப்பு ஏற்படாமைக்கான உள்ளார்ந்த விளக்கம் பாதுகாப்புச் செலவினம் எந்த அளவிற்கு அதிகரிக்கின்றதோ அந்த அளவிற்கு தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பு அதிகரிக்கும்.

இதனால் இலங்கை சிங்கள தேசம் என்பதை நிலைநிறுத்த முடியும் என்பதே ஆகும்.

எப்படி இருக்கின்றது இலங்கையின் பொருளாதாரத் திட்டமிடலும் வரவுசெலவுத் திட்டமும்?

# நிரந்தர சமாதானம் என்ற எட்டாக் கனியை பொருளாதார அபி.ஊடாகவே பறிக்க முடியும்

## பாரிஸ் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

(பாரிஸ்)



பொருளாதார அபிவிருத்தியின் ஊடாகவே நிரந்தர சமாதானம என்ற எட்டாக்கனியை எட்டிப்பறிக்க முடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புரிந்துணர்வு அதிகமாகவே தேவைப்படுவதாக அவர் சுட்டிக காட்டியுள்ளார். பிரான்ஸ தலைநகர் பாரிஸில் யுனெஸ்கோ தலைமையகத்தில் நடைபெற்று வரும் 140 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பிரான்ஸ் ஜனாதிபதி ஹன்சுபா மெதரோலின் சமாதானம் தொடர்பான கருத்துக்களைச் சுட்டிக்காட்டி உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானம் என்பது தைரியத்தினதும் ஏனையோரினதும் மதிப்பினதும் பிரதிபலிப்பாகும் எனக்குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசியப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எமது அரசாங்கமே முதலில் ஆரம்பித்தது.

பேச்சு வார்த்தை மூலமான நடவடிக்கையினால் பல பிரதிபலன்கள் கிட்டியுள்ளபோதிலும் நிறைவேற்றப்பட வேண்டிய மேலும் பல குறிக்கோள்கள் உள்ளன எனவும் ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்தார். (ற-4)

# கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை ஐரோ.ஒன்றியத்தின் நடவடிக்கை பாதிக்காது

## ஹக்ரப் ஹொக்லண்ட்

(கொழும்பு)

இலங்கையில் போறிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கண்காணிப்புக்குழுவில் 50சதவீதத்திற்கும் மேற்பட்டோர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச்சேர்ந்தவர்களாயுள்ள போதிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கையால் அவர்களது பணி எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாதென அதன் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

தற்போது கண்காணிப்புக் குழுவில் 60பேர் உள்ளனர். இவர்களில் 37பேர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். வடக்கு-கிழக்கில் வழமை போல் எமது பணிகள் தொடர்கின்றன .அதில் எவ்வித மாற்றமும் இல்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்புப் பணி குறித்து அவர் கூறுகையில், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வன்முறைகள் இடம்பெறுவதைத் தடுப்பதறகாக கண்காணிப்புக்குழு தீவிர கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்ளும்.



தேர்தல் காலத்தில் வடக்கு-கிழக்கு நிலைமைகள்குறித்து ஆராயவுளளோம். தேர்தல் பரப்புரைகள் சூடு பிடிக்கும் போது கண்காணிப்புப் பணிகளும் தீவிரமடையும். வடக்கு- கிழக்கு கள நிலைமைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எம்மைச் சந்தித்து ஆராயவுள்ளது. தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் அவர்களும் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் நாளன்று வடக்கு-கிழக்கு எல்லைப் பகுதிகளில் வாக்காளர்களின் நன்மை கருதி இராணுவ சூனியப் பிரதேசத்தில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடத் தயாராகவுள்ளோம் என்றார். (ற)

# இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் 'டிரான்ஸ் பரன்ஸி' கோரிக்கைகள் முன்வைப்பு

(கொழும்பு)

பொருளாதாரப் பகிர்வு மற்றும் ஊழல் தடுப்பு ஆகியவை தொடர்பில் டிரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷினல் நிறுவனம் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் யோசனைகளை முன்வைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் நாட்டிற்கு ஏற்றவகையில் அமைச்சரவையின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்த வேண்டும், அரசாங்கத்திணைக்களங்களுக்கு பிரதானிகளை நியமிக்கும் போது திறமையுள்ளவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஊழல்களை ஒழிக்க தேசியக் கொள்கையொன்றை வகுக்கவேண்டும் நிதி ஒழுங்கமைப்பொன்றை ஏற்படுத்தவேண்டும். ஊழல்கள் மற்றும் கணக்காய்வு என்பவற்றுக்கு ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பொது மக்களின் பணம் அரசாங்க நிகழ்வுகளுக்கு அதிகளவில் செலவிடப்படுவதனை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் இடம்பெறும் செலவுகளை ஆய்வு செய்ய நிறுவனம் ஒன்றை அமைக்கவேண்டும். மற்றும் அரசாங்கத்துறையில் நிதிச் சீரின்மையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளையே ஜனாதிபதி வேட்பாளர்களிடம் டிரான்ஸ் பரன்ஸி இன்ரநஷல் முன்வைத்துள்ளது. (ற)

# வேட்பாளர்களை ஆதரிப்பது தொடர்பில் சிங்கள இடதுசாரிகள் இடையே பிளவு

(கொழும்பு )

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக சிங்கள இடதுசாரிக்கட்சிகளிடையே பிளவு ஏற்பட்டுள்ளது.

லங்காசமசமாஜக் கட்சியின் தலைவரான பட்டிவீரக்கோன், சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையே தான் ஆதரிப்பதாகவும் தனி நபரான மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அளிக்கப்படும் உறுதிமொழிகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படமுடியாது என்று கூறிய பட்டி வீரக்கோன் ,ஜே.வி.பி மற்றும ஜாதிக ஹெல உறுமயவுடன் மஹிந்த ராஜபக்ஷ எப்படி உடனபாடு வைத்துக் கொள்ள முடிந்தது ? என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை என்றும் வீரக்கோன் தெரிவித்தார்.

தனிநபர்கள் கட்சியுடன் ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்களால் எவ்வித பயனும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் விஜேயடயஸ் முதலாளித்துவக் கட்சிகளால் தேசிய இனப்பிரசசினைக்குத தீர்வு காணமுடியாது என்று சாடியுள்ளார்

பிற இடதுசாரித் தலைவர்களைப் போல் மஹிந்த ராஜபக்ஷவை நீங்கள் ஏன் ஆதரிக்கவில்லை ? என்ற கேள்விக்குப் பதிலளித்த விஜேயடயஸ் கடந்த தேர்தலில் அவர்கள் சந்திரிகா குமாரதுங்கவின் சேலையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தார்கள் .இப்போது மஹிந்த ராஜபக்ஷவின் சால்வையைப பிடித்துத்தொங்கிக் கொண்டிருக்கிறார்கள என்று குறிப்பிட்டார். (ற-4)

## பாதிக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு கல்முனை ,மருதமுனைப்பகுதியில் சுனாமியினால பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

கரையோரத்திலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதாக அரசு உறுதி மொழி வழங்கிய போதும் அதனை செய்து முடிக்காமைக்கு எதிர்ப்புத் தொிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் பாததைகளை ஏந்தியவாறு தமக்கு நிரந்தர வீடுகளை அமைத்துத்தருமாறு கோஷமெழுப்பினர் . ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பொதுக்கூட்டமொன்றும இடம் பெற்றுள்ளது .(ற-8)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

ஜபத்தின் மூலம் சாதகன் எல்லையற்ற பிரமத்தை அடைகிறான். சில புனித மந்திரங்கள் அசாதாரணமான தொய்வீக சக்தியைத் தோற்றுவிக்கின்றன. அவற்றை முறைபபடி ஒரு குருவிடமிருந்தே பெற வேண்டும். குரு இல்லாமல் ஆத்ம சாதனையில் எதுவும் இயலாது. அது ஆபத்தானதும் கூட.

சுவாமி விவேகானந்தர்

## தீவக மக்களுக்கு அழைப்பு

இலங்கை-இந்திய வல்லாதிக்கத்தின் கூட்டுச் சதியினால் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்ச்சிகள் இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு தீருவில் நினைவுத்தூபியில் நடைபெறவுள்ளது.

தீவக மக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு தேசிய எழுச்சிப்பேரவை தீவகக்கோட்டத்தினரால் கேட்கப் பட்டுள்ளது. (ந)

## விபத்தில் காயம்

சாவகச்சேரியில் நேற்றையதினம் இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தர்ர். நேற்று மாலை 2மணியளவில் நகரை நோக்கி டச்சு வீதியில் வந்துகொண்டிருந்த லொறியும் எதிராகச் சென்ற மோட்டார் சைக்கிளும் புளியடிச்சந்தியில் விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த யாழ்.பல்கலைகழக மாணவன் ஆறுமுகம் அரவிந்தன் என்பவர் காயத்திற்குள்ளாகி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-21)

## திடீரென நிறம் மாறும் திருமலைக் கடல் நீர்

(திருகோணமலை)

திருகோணமலை உள்துறை வீதி கடற் பகுதியில் கடல் நீரின் நிறம் மாறியுள்ளது. இதனைப் பார்ப்பதற்கு பெரும் திரளான மக்கள் அங்கு சென்று வருகின்றனர்.

இப்பிரதேசங்களில் கடலின் நிறம் திடீரென இளம் பச்சை,கபிலநிறம் ,கருநீலம் மற் றும் மங்கலான வெள்ளை ஆகிய நிறங்களில் காணப் பட்டது.

அத்துடன் அங்கு ஒருவகையான துர் நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இப்பகுதியில் நெடுங்காலமாக கடற்றொழில் புரியும் மீனவர் ஒருவர்.,இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

திடீரென ஏற்படும் காலநிலை மாற்றங்களால் இதுபோன்ற நிற மாற்றங்களும் துர்நாற்றமும் வீசுவது வழ்மை ஆயினும் இதுபோன்ற ஒரு நிலைமை இது வரை இடம் பெறவில்லை எனத் தெரிவித்தார்.

கடந்த வாரத்திற்கு முன்னரும் திருகோணமலை கடற்பரப்பில் ஒளி வடிவம் தெரிந்தமை குறிப்பிடத்தக்கது. சுனாமியின் பின்னர் கடலில் ஏற்படும் மாற்றங்கள் மக்களிடையே பீதியை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## இலங்கை விமானத்தில் கோளாறு இந்தியாவில் தரையிறக்கம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து ஓமானின் மஸ்கட் நகர் நோக்கிப் பயணமான சிறிலங்க எயார்லைன்ஸ் விமானம் ஒன்று இயந்திரக்கோளாறு காரணமாக இந்தியாவில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட விமானத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் புறப்பட்டு இரண்டு மணித்தியாலங்களில் அவ் விமானம் பெங்களூரில் தரையிறக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா எயார்லைன்ஸின் பேச்சாளர் ருபனி ஜயசிங்க தெரிவித்தார்.

விமானத்தில் இருந்த 101 பயணிகளும் நேற்று முன்தினம் இரவு பெங்களூர் சர்வதேச விமான நிலையத்தில் தங்கவைக்கப்பட்டனர். அப்பயணிகள் மீண்டும் இலங்கைக்கு கொண்டுவர விமானம் அனுப்பப்பட்டதாகவும் அவர்கள் இங்கிருந்து மஸ்கட்டிக்கு மீண்டும் அனுப்பப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

லண்டன் நோக்கிப் பயணமான விமானத்தில் குண்டு இருப்பதாக புரளி கிளப்பப்பட்டு அவ் விமானம் தரையிறக்கப்பட்ட ஒரு மணித்தியாலத்திலேயே, இவ் விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பெங்களூரில் தரையிறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ந-4)

## நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்கான அரசசேவை செலவீனங்கள் பற்றிய விபரங்களை குறிப்பிடும் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகமவின் சார்பில் சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா சட்ட மூலத்தை சமர்ப்பித்தார். அதன் பிரகாரம் அடுத்த ஆண்டு அரசாங்க சேவைகளுக்கான செலவீன மதிப்பீடுகள் 56 ஆயிரத்து 29 கோடி ரூபாவை தாண்டுகின்றது.

இதில் 53 ஆயிரத்து 600 கோடி ரூபா கடனாகப் பெற்றுக்கொள்ளப்படும். பாதுகாப்பு அமைச்சிற்காக செலவிடப்படவுள்ள தொகை 6ஆயிரத்து 900 கோடிரூபாவைத் தாண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சிற்காக 3ஆயிரத்து 600 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவழிக்கப்படும். சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சிற்கு சுமார் ஆயிரத்து 773 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

விவசாய அமைச்சின் செலவீனங்கள் ஆயிரத்து 100 கோடியைத் தாண்டுவதாக நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு தொடரும்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்காக நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக ஐரோப்பியு ஒன்றியம் அறிவித்துள்ளது.

இச் சமாதான முனைப்பை முன்னகர்த்திச் செல்வது இலங்கை அரசினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் பொறுப்பாகும். இதனைத்தவிர அப்பொறுப்பு சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேயின் உடையதல்ல என ஐரோப்பிய ஒன்றியம் கருதுவதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆல்யம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ள போதிலும் இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை கொண்டுவரும் வகையில் இரு தரப்பின்ருக்குமிடையில், ஒருமித்த கருத்தினை ஏற்படுத்துவ்து என்ற நோர்வேயின் நகர்வினை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொள்கின்றது.

எனவே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமதலைமை நாடுஎன்ற வகையில் நோர்வேயின் உதவியுடன் இலங்கையில் இருதரப்பும் சமாதானத்தை முன்னகர்த்திச் செல்ல தாம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ந-4)

## தலைவர் பிரபா...

குற்றச்சாட்டுகளின் கீழ் பிரபாகரனை யுத்தக் குற்றவாளியாக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளதாகவும் சேனக பெரேரா தெரிவித்துள்ளதாக அவ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ந-4)

## மகேஸ்வரனை...

எக்கட்சியுடனும் பேச்சுக்களை நடத்தும் அதிகாரத்தை ஐ.தே.கட்சியின் செயற்குழு ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கியுள்ளது.

ஆயினும் மகேஸ்வரனின் குற்றச்சாட்டு இதனைக் கேள்விக்குறியாக்கியுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார். ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் மகேஸ்வரன் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க ஐக்கிய தேசியக்கட்சி தன்மீது ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால் கட்சியில் இருந்து விலகத்தயாராக இருப்பதாக மகேஸ்வரன் கூறியுள்ளார்.

ஐ.தே.கட்சி தனி நபர் சொத்து அல்ல. எந்த ஒரு நியாயமான காரணமும் இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அக்கட்சி ஒழுங்கு நடவடிக்கைமேற்கொள்ள முடியாது என்று கூறிய மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் தன் கருத்துக்களை வெளிப்படுத்த ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்கள் அனுமதிப்பதில்லை என்றும் ஐ.தே.க- இ.தொ.கா.இடையே இரகசிய உடன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (ந-6,4)

## பவ்ரல் அமைப்பு தளபதிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தலை கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு முப்படைத்தளபதிகளையும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளையும் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் வசதிகளை வழங்குவது பற்றியும் ,கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்க செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

வாக்களிப்பின் போது நடைபெறும் முறைகேடுகள் குறித்து கண்காணிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ந-8)

## கைதிகள் இருவரை ஆயுததாரிகள் கடத்தினர்

(திருகோணமலை)

திருகோணமலைச் சிறைச்சாலையில் இருந்து மூதூர் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கென தனியார் பஸ்வண்டியில் கொண்டு செல்லப்பட்ட 4 விளக்கமறியல் கைதிகள் மூதூர் கிளிவெட்டிச் சந்தியில் வைத்து நேற்றுக்காலை ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சிறிது நேரத்தில் கடத்தப்பட்டவர்களில் இருவர் விடுவிக்கப்பட்டனர். மிகுதி இரண்டு பேரும் ஆயுததாரிகளினால் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டோரில் இருவர் முஸ்லிம்கள். இருவர் தமிழர்கள். இதில் தமிழர் இருவருமே கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தின்போது ஏற்பட்ட இழுபறியில் சிறைக்காவலர் ஒருவர் காலில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் பயணிகள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப் படுகிறது. (ந-4)


## மனித உரிமைகள் டிப்ளோமா கற்கை நெறி

மேற்படி கற்கை நெறி (72 மணித்தியாலங்கள்) எமது பணியகத்தினால் நடாத்தப்படவுள்ளது. இது வார இறுதித் தினங்களில் நடைபெறும்.

ஆரம்பம் :14.10.2005 (பி.ப)
இடம் :"செப்பாக்" 843 ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.
கல்வித்தகைமை : பின்வருவனவற்றில் ஏதாவதொரு சான்றிதழ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

1. பட்டதாரிச் சான்றிதழ்
2. உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி சான்றிதழ்
3. இலங்கை நிர்வாக சேவை சான்றிதழ்
4. பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ்

**புலமைப்பரிசில், விண்ணப்பப்படிவம் :** கட்டணம் தொடர்பாக, எமது நிர்வாகத்தின் தீர்மானத்திற்கேற்ப புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை எமது பணியகத்தில் வார நாட்களில் காலை 8.45 தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் . ***படிவங்களை பெறுவதற்கான கடைசித்தினம் 08.10.2005.*** பூர்த்தி செய்த படிவங்களை எமக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் தினம் 12.10.2005. விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 150/=

**விரிவுரையாளர்கள்**

| | |
|---|---|
| திரு. ம.ஜெறமேடியஸ் | -LL.B Attorney-at-Law |
| திரு. பீ.என். தம்பு | -LL.B, LL.M,Attorney-at-Law |
| திரு. எஸ்.செல்வகுணபாலன் | -LL.B, Attorney-at-Law;Assistant Legal Draftsman |
| அருட்திரு. வீ.யோகேஸ்வரன் | -Attorney-at-Law |
| அருட்திரு.அ.இ.பேணாட் | -LPh;LTh (Pune);PG Dip in Human Rights & Ed (Lond); MA (Ed) (Lond) |

அருட்தந்தை அ.இ.பேணாட்
(இயக்குநர்)
சமாதான மனித உரிமைப் பண்பாட்டு பணியகம் (செப்பாக்);
தொலைபேசி எண் 021-222 7884

(9939)



**மனோகரா**
ஸ்ரீகாந்த், சோனியாஅகர்வால் நடித்த
**ஒருநாள் ஒருகனவு**
கா.நே.; 10.30.2.30.6.30.9.30 (பு.நே)

07-10-2005 முதல்
பார்த்திபன், லஷ்மிராய், வடிவேல் நடித்த
**குண்டக மண்டக..**
(இந்தியா, இலங்கை ஒரேதின வெளியீடு)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு நமீதா நடித்த
**சாணக்கியா**
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அர்ஜுன், தர்மி, பிரகாஷ்ராஜ் நடித்த
**அனுமான்**
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ...பனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.